# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1872/33 - 2014 ජූලි මස 25 වැනි සිකුරාදා- 2014.07.25

*1872/33 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

*பிரிவு 4 (2) இன் கீழான பிரசுரிப்பு*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் "நிறுவகம்" என குறிப்பிடப்படும்) அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள, 2012, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும், இலாபநோக்கமற்ற நிறுவனங்கள் (அரசசார்பற்ற அமைப்புக்கள் உட்பட) தொடர்பில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறை (*SoRP*) கூற்றினை நிறுவகம் வழங்கியுள்ளது.*

பேரவையின் கட்டளைப்படி,

*அருண அல்விஸ்,*
*செயலாளர்.*

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல. *30* A, *மலலசேகர மாவத்தை,*
கொழும்பு *7,*
*2014, யூலை 25.*

இலாப நோக்கற்ற நிறுவனங்களிற்காக
(அரசசார்பற்ற அமைப்புக்கள் உட்பட)

பரிந்துரைக்கப்பட்ட இலங்கை செயன்முறை கூற்று
(SL SoRP- NPOs [including NGOs]

**உள்ளடக்கம் :**

1. முகவுரை

2. அறிமுகம்

2.1 பொது

2.2 சட்டரீதியான சட்டகம் :

3. நிதி அறிக்கையிடலிற்கான கோட்பாட்டுச் சட்டகம்

3.1 இலாப நோக்கற்ற நிறுவனங்களிற்கான இன்றியமையாத பொருள் விளக்கங்களும் கருத்துக்களும்

3.1.1 இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் பொருள் விளக்கம்

3.1.2 நன்கொடைகள்/பங்களிப்புக்கள், மானியங்கள், உறுப்பினர் கட்டணம்

3.1.3 நன்கொடை ஒப்பந்தங்கள்

3.1.4 மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள்

3.1.5 மட்டுப்படுத்தப்படாத நிதியங்கள்

3.1.6 திரண்ட நிதியம்

3.1.7 ஆட்சிச் சபை

3.2 பாவனையாளர்களும் அவர்களின் தகவல் தேவைகளும்

3.3 பயனுடைய நிதித் தகவலின் தரமான குணாம்சங்கள்

3.4 பயனுடைய நிதித் தகவலின்மீதான கிரயக் கட்டுப்பாடு

3.5 அடிப்படையான எடுகோள்

4. **NPO** பிரத்தியேக சரத்துக்கள்

5. அமுலுக்கு வரும் திகதி

இணைப்பு – நிதிக்கூற்றுக்களின் விளக்கக் கட்டமைப்பு

**1. முகவுரை**

1.1 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் (CA Sri Lanka) இந்த SL SoRP for NPOs ஐ ஏற்படுத்துவதின் நோக்கமாவது நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பிற்கு பொறுப்புடையோர்களுக்கு உதவுவதும், நிதிக்கூற்றுக்களின் பாவனையாளர்களிற்கு போதிய தகவல்களை தரும் வகையில், NPOs களின் நிதி அறிக்கையிடல் தரத்தை மேம்படுத்துவதுமாகும். இது NPOs களின் கணக்கீட்டு நடைமுறையிலும் முன்னிலைப்படுத்தலிலும் நிகழும் வேற்றுமையை குறைப்பதையும் கவனத் தில் கொண்டுள்ளது. எல்லா NPO களும் தங்கள் நிதிக்கூற்றுக்கள் நிறுவனங்களின் நிதி நிலைமைகள் பற்றி உண்மையானதும் நியாயமானதுமான பார்வையைத் தரும்வண்ணம் இந்த SL SoRP ஐ பின்பற்றுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

1.2 சனவரி 1, 2012 இலிருந்து முழுமையாக சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் (IFRS) இணங்கும்வகையில், 2005 இல் வெளியிடப்பட்டு 2006, ஏப்பிறல் 1 இலிருந்து அமுலில் இருக்கும் SL SoRP for NPO களுக்கு அவை 2006 இல் இருந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLASs) அடிப்படையில் அமைந்திருப்பதால், மாற்றம் தேவைப்படுகின்றது. ஆகையினால், CA இலங்கை தற்போதிருக்கும் SL SoRP ஐ IFRS களிற்கமையவாக இருக்கும்வகையில், இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் மாற்ற தீர்மானித்துள்ளது.

1.3 இந்த SL SoRP இலங்கையில் தொழில்படும் எல்லா NPO களுக்கும் அவற்றின் அளவையோ சிக்கல் தன்மையையோ கருத்திற்கொள்ளாது பிரயோகிப்பதற்கு கருதப்படுகின்றது.

1.4 இது உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை தரும் அட்டுறு அடிப்படையிலான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு அடிப்படையைத் தருகின்றது.

1.5 NPOs அவைகளிற்கு பிரயோகமாகும் நியமங்களுடன் மாத்திரமே இணங்க வேண்டும். NPO க்கள் தங்கள் சொந்த NPOs வின் செயற்பாடுகளிற்கு பிரயோகமில்லாத நியமங்களை பாது காப்பாக புறக்கணிக்கக்கூடும்.

1.6 எல்லா NPO க்களும் தங்கள் நிதிக்கூற்றுக்களை தயாரித்து முன்னிலைப்படுத்தலில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS சட்டகம்) குறிப்பிடும் தேவைப்பாடுகளுடன் இணங்குமாறு கோரப்படுகின்றன. SLFRS சட்டகமானது முழு SLFRSs களையும் (IFRIC மற்றும் SIC உள்ளடங்கலாக முற்றடக்க SLFRSs க்களின் தொகுதி) சிறிய மற்றும் மத்திய அளவிலான நிறுவனங்களிற்கான SLFRSs ஐயும் உள்ளடக்கும். பொது பொறுப்புக்கூறலுடைய எல்லா NPO களும் எல்லா SLFRSs களுடனும் இணங்க வேண்டும்.

1.7 பிரயோக கணக்கீட்டு நியமங்களின் தொகுதியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறிப்பான மேலதிக சரத்துக்கள் SL SoRP பகுதி 4 இல் தரப்பட்டுள்ளன.

1.8 இந்த SL SoRP இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சரத்தும் எந்தவொரு NPO இற்கும் அதன் பொருத்தம் மற்றும் பொருண்மையான தன்மையின் கண்ணோட்டத்தில் கருத்திற்கொள்ளப் பட வேண்டும்.

**2. அறிமுகம் :**

**2.1 பொது**

2.1.1 உலக முழுவதிலும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் தாங்கள் தொழிற்படும் நாடுகளின் சமூக பொருளாதார செயற்பாட்டில் ஒரு முக்கிய வகிபாகத்தை கொண்டுள்ளன. இது வளர்முக நாடுகள் மட்டுமன்றி, வளர்ச்சியடைந்துள்ள நாடுகளிலும் உண்மையாகும். இலங்கை NPOs இதற்கு விதிவிலக்கல்ல. இந்த நிறுவனங்கள் சமூக மற்றும் அரசியல் ஆகிய இருதுறைகளிலும் முக்கிய வகிபாகத்தை கொண்டவையாகும்.

2.1.2 இலங்கையில் NPOs போன்ற செயற்பாடுகள் முதன்முறையாக பிரித்தானிய காலனித்துவத்து 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் ஆரம்பமாயின. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களோடு NPOs இன் பிரசன்னத்தில் பெரும்படியான விரிவாக்கம் ஏற்பட்டது. 1970 களின் பிற்பட்ட காலப்பகுதியில் பொருளாதார கட்டுப்பாட்டுத் தளர்வு மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட அந்நிய செலாவணிகளின் விதிகள், வணிக மற்றும் பிரயாண கட்டுப்பாடுகள் ஆகியவற்றில் ஏற்பட்ட தளர்வின் நிமித்தம், அந்நிய NGO க்களின் எண்ணிக்கையில் ஒரு வியத்தகு அதிகரிப்பு ஏற்பட்டது. அந்நிய உதவியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் சமூக கிராமப்புற அபிவிருத்தியுடன், NGO க்களில் மேலும் அதிகரிப்பு கவனிக்கப்பட்டது.

### 2.2 சட்ட ரீதியான சட்டகம்

2.2.1 இந்த நிறுவனங்களின்மூலம் வழிப்படுத்தப்படும் நிதிகளின் பருமன், அவைகளை பின்தொடர்வதி லும் கண்காணிப்பதிலும் பொறுப்புக்கூறுவதிலுமான பொறுப்பை மிகவும் உயர்த்துகின்றது. ஆன படியால், இலங்கையில் வெளிப்படைத்தன்மை ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்நிறுவனங்களிற்கு அவற்றின் நிகழ்ச்சிகளின் கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் உள்ளடங்கலாக எவ்வாறு நடத்துவது என்பது பற்றிய தெளிவான வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன. எனினும், சமூகத்தில் பரந்துபட்டளவில் இந்த நிறுவனங்களின் வகிபாகத்தின் முக்கியத்துவத்தை கவனத்திற்கொண்டு பார்க்கும்பொழுது, விரிவான ஒழுங்குவிதிகள் தக்கவாறு பயனளிப்பதில்லை என்பதும், 'மிக அதிக ஒழுங்குவிதிகள் மிகக்குறைந்த' ஒழுங்குவிதிகள் போன்றே தகாது இருக்கலாம் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இலாப நோக்கற்ற நிறுவனங்களிற்காக (அரச சார்பற்ற அமைப்புக்கள் உள்ளடங்கலாக) பரிந்துரைக்கப்பட்ட இலங்கையில் செயன்முறை கூற்று இந்த பரந்த சட்டகத்தின் அடிப்படையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.2.2 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, தன்னார்வ சமூக சேவை அமைப்புச் சட்டம் ("VSSO Act") அரச மானியம் பெறும் அல்லது வெளிநாட்டு பணியாளர்களுக்கான நுழைவுவின்(VISA) கோரும் எல்லா அமைப்புக்களையும் இந்தச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்துகொள்ளுமாறு கோருகின் றது. NPO க்கள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், பரிப்பு (கடன்பாடு) மட்டுப்படுத்தப்பட்ட கம்பனிகளாகவோ, 1917 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நம்பிக்கை கட்டளைச்சட்டத்தின்கீழ் நம்பிக்கை நிறுவனங்களாகவோ, 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, இறைவரிச் சட்டத்தின்கீழ் அல்லது 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, அறக்கட்டளைகள் இறைவரிச் சட்டத்தின்கீழ் அல்லது 1979ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இறைவரிச் சட்டத்தின்கீழ் அல்லது 1949ஆம் ஆண்டின் 55ஆம் இலக்க பரஸ்பர சேமலாப சபைகள் சட்டத் தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளைகளாகவோ பதிவு செய்யலாம். ஒரு NPO ஒரு பாராளு மன்ற சட்டமூலமாகவும் தோற்றுவிக்கப்படலாம்.

2.2.3 1998 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புக்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை), (திருத்தம்) சட்டம், VSSO சட்டத்தின் ஒரு திருத்த மாகும். இந்த திருத்தம் ஒரு அமைப்பில் மோசடி அல்லது கையாடல் நிகழ்ந்து இருக்கும்பட்சத்து அமைப்பின் விவகாரங்களின் நிருவாகத்திற்கு ஒரு இடைக்கால முகாமைச் சபையை தாபிப்பதை அனுமதிக்கின்றது.

2.2.4 பின்னர் 1999 இல், வழங்கப்பட்ட சனாதிபதியின் சுற்றறிக்கை எல்லா NGOகளையும் தேசிய NGOs (அரசசார்பற்ற அமைப்புக்கள்) அலுவலகத்துடன் பதிவுசெய்து கொள்ளுமாறும், தங்கள் நிதி மூலங்கள், வருடாந்த செலவு மற்றும் வருடாந்த பாதீடு (பட்ஜட்) ஆகியவற்றை தெரிவிக்கு மாறும் கோருகின்றது. பதிவிற்கான முன் தேவைப்பாடு பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் மற் றும் திட்ட அமுலாக்கல் அமைச்சு மற்றும் நேரடித் தொடர்புடைய அமைச்சிடமிருந்து அனுமதி பெறுவதை உள்ளடக்கும். ஒரு மாவட்டத்தில் அல்லது பிரிவு மட்டங்களில் தொழிற்படும் NGO கள் பிரயோகத்திற்குரிய மாவட்ட அல்லது பிரிவு செயலாளருடனும் பதிவுசெய்து கொள்ளவேண் டும்.

## 3. நிதி அறிக்கையிடலுக்கான கோட்பாட்டுச் சட்டகம்

### 3.1 NPO தொடர்புபட்ட முக்கிய சொற்பொருள் விளக்கங்களும் கோட்பாடு களும்

#### 3.1.1 ஒரு NPO வின் (இலாப நோக்கற்ற அமைப்பு) பொருள்விளக்கம்

(i) ஒரு இலாப நோக்கற்ற அமைப்பானது, பங்குதாரர்கள் இன்றியும் இலாப நோக்கின்றியும் பொதுமக்களின் நன்மைக்காக தன் வணிகத்தை நடத்தும் ஒரு கூட்டுத்தாபனம் அல்லது சபையாகும். இந்த அமைப்புக்கள் ''அபிவிருத்தி அமைப்புக்கள்'', ''தனியார் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்'',''சிவில் சமூக அமைப்புக்கள்'', ''அரசசார்பற்ற அமைப்புக்கள்'', ''இலாப நோக்கமற்ற அமைப்புக்கள்'', ''அறக்கட்டளைகள்'' மற்றும் இது போன்ற பதங்களினாலும் குறிப்பிடப்படும்.

(ii) இந்த SL SoRP உலக வங்கி சிவில் சமூக சபைக்கு கொடுத்திருக்கும் கீழ்க்காணும் பொருள் விளக்கத்தை அதன் உள்ளடக்கப் பிரயோகங்களிற் காக ஏற்றுக்கொண்டுள்ளது:

"உலக வங்கியானது, சிவில் சமூகம் என்ற பதத்தை பரந்துப்பட்ட அணி வரிசையில் அரச சார்பற்ற இலாப நோக்கற்று இருக்கும் அமைப்புக்களை குறிப்பிடுவதற்காக உபயோகிக்கின் றது. இப்படியான அமைப்புக்கள் பொது வாழ்வில் பிரசன்னமாயிருந்து அவைகளின் அங்கத்தவர்களின் ஒழுக்கம், கலாசாரம், அரசியல், விஞ்ஞானம், சமயம் அல்லது பரோபகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த விருப்பங்களையும் விழுமியங்களையும் மேம்படுத்து பவைகளாக

இருக்கும். எனவே, சிவில் சமூக அமைப்புக்கள் (CSOs/ச.ச.அ.) எனும் பதம் சமூக குழுக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGOs), தொழிற்சங்கங்கள், உள்ளூர்வாசிகளின் குழுக்கள், அறக்கட்டளைகள், மதநம்பிக்கை அமைப்புக்கள், தொழில்சார் சங்கங்கள் நிறுவனங்கள் போன்ற பலதரப்பட்ட அமைப்புக்களை குறிப்பிடும்.

(iii) பலதரப்பட்ட புலமையாளர்கள் அரசசார்பற்ற அமைப்புக்களை வேறுபட்ட முறையில் வர்ணித்திருந்தாலும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, தன்னார்வ சமூக சேவை அமைப்புச் சட்டம் (பதிவும் கண்காணிப்பும்) அரசு சாரா அமைப்புக்களை கீழ்க்கண்டவாறு வர்ணித்துள்ளது.

இதன்படி, கீழ்க்காணும் எந்தவொரு அமைப்பையும் அரசசார்பற்ற அமைப் பாக கருதலாம்:

* அது தனி நபர்கள் குழுவினால் தன்னார்வ அடிப்படையில் உருவாக்கப்பட்டு அரசுசார் தன்மையற்றதாக இருக்கும்;

* அது தன் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு பொது மக்களின் பங்களிப்பு, அறக் கொடை, அரசாங்க உதவி மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கொடைகள் ஆகிய வற்றில் தங்கியிருக்கும்;

* மன அல்லது உடல்ரீதியாக வலு இழந்தவர்கள், ஏழைகள், அநாதைகள் மற்றும் வகையற்றவர்கள் ஆகியோர்களுக்கு உதவியையும் சேவையையும் வழங்குவது மற்றும் இயற்கை அனர்த்தங்களின்போது நிவாரணமளிப்பது ஆகியவைகளை அதன் முக்கிய நோக்கங்களாக கொண்டிருக்கும்.

(iv) SL SoRP இன் பிரயோகத்திற்குள்ளாகும் பெரும்பாலான வேறுபட்ட NPO இற்களின் முக்கிய (சிறப்பான) அம்சங்களாவன:

(a) அவைகள் உள்ளூர் (குறிப்பிடப்பட்ட ஒரு பகுதி) தேசிய அல்லது சர்வதேச அளவில் தொழிற்படும் தன்னார்வ அமைப்புக்கள்;

(b) அவைகள் பொதுச் சமூகம், சமூகத்தின் பாதகமான தாக்கத்திற்குள்ளாகும் ஒரு குறிப்பிட்ட குழு அல்லது இனங்காணப்பட்ட அக்கறையுடைய அல்லது அந்நோக்கத்திற்கான குழுக்கள் ஆகியவற்றிற்கு நன்மை பயக்கும் நோக்கங்களை குறிப்பாக உரு வாக்கி இருக்கும் ;

(c) வணிக நிறுவனங்கள் போலன்றி, அவைகளின் நோக்கங்கள் இலாப நோக்கமற்றவை யாகும்;

(d) ஒரு NPO இலாபத்தை உழைக்கலாம். ஆனால் சொந்த உரிமை நாட்டம் இல்லாத படியால் இலாபம் வளங்களை தருவோரிற்கு பகிரப்படுவதில்லை;

(e) அவைகள் தங்கள் நோக்கங்களை அல்லது தேவைகளை செயற்படுத்துவதற்கு சமூகத்திலுள்ள தனி நபர்கள் (அல்லது நபர்களின் குழுக்கள்), கூட்டு நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், சர்வதேச அமைப்புக்கள் அல்லது இறையாண்மை அரச நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து நிதி ஆதரவை கேட்டுப்பெறும்;

(f) அமைப்புக்களின் நோக்கங்களை பூர்த்திசெய்ய நிதியை உபயோகிக்கும்.

### 3.1.2 நன்கொடைகள்/பங்களிப்புக்கள், மானியங்கள், உறுப்பினர் கட்டணம்

(i) நன்கொடைகள் மற்றும்/அல்லது நன்கொடை அமைப்புக்களிடம்/தனி நபர்களிடமிருந்து பெறும் நன்கொடைகள் அல்லது/ மற்றும் பங்களிப்புக்கள் மற்றும் அரச மானியங்கள் NPOகளின் வளங்களின் முக்கியப் பகுதியாகும். இந்த பங்களிப்புக்களுடன் ஒரு குறிப்பிட்ட சேவையை அல்லது வேலையை செய்யும் கடப்பாடு இணைக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறாயின், பங்களிப் புக்கள் "மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள்" ஆகக் கருதப்படலாம்.

(ii) நன்கொடைகள் மற்றும்/அல்லது தனிநபர் அல்லது நிறுவனங்களின் பங்களிப்புக்கள் கீழ்க் காண்பவைகளை உருவாக்கும்:

* ஒரு ஒழுக்கக் கட்டுப்பாடு, எவ்வழியில் நிதியை பெற்றிருந்தாலும்;

* நிதி பெறப்பட்ட நோக்கங்களுக்காக நிதியை உபயோகப்படுத்தலுக்கான சட்டரீதியான கடப்பாடு; மற்றும்

* மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள், எங்கு பாவிப்பு குறிப்பிடப்பட்டிருக்கும் போது.

(iii) ஒரு கடப்பாட்டு நிகழ்வு ஒரு சட்ட ரீதியான கடப்பாடாகும். உதாரணமாக, இது மாற்று நோக்கமின்றி கட்டுப்பாட்டை செயல்படுத்த வேண்டிய ஒரு ஒப்பந்தத்திலிருந்து எழலாம்.

(iv) ஒரு பங்களிப்பானது (நன்கொடை அல்லது மானியம்) அது பெறப்படும் என்பதற்கான நியாயமான கிடைக்கப்பெறும் வரையிலும், அத்துடன் எங்கு பொருத்தமானவிடத்து அமைப்பு இணைக்கப்பட்டு நிபந்தனைகளுடன் ஒத்திசையும் வரையிலும் உள்வரும் வளமாக கருதப்பட மாட்டாது. நிதியை பெறுவது மாத்திரம் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதற்கான முடிவான பெற்ற சான்றாக அமையாது. நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படும் வரையில் பங்களிப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களின் பகுதியாக கருதப்படல் வேண்டும்.

(v) பெரும்பாலான NPO களில் உறுப்பினர் கட்டணம் உள்வரும் வளங்களின் ஒரு கூறாகும். உறுப்பினர் கட்டணங்கள் உறுப்பினர் மற்றும் ஏனைய சேவைகள் மற்றும் தயாரிப்புக்களிற்கு தனித்தே கொடுப்பனவு செய்ய அனுமதித்திருக்கும்பட்சத்து, கட்டணங்கள் பெறப்பட்ட பின்பே ஏற்பிசைவு செய்யப்படும். உறுப்பினர் கட்டணம் உறுப்பினர்களுக்கு ஆண்டின்போது சேவைகள் மற்றும் பிரசுரங்கள் வழங்க அனுமதித்திருந்தால், அது கால நிர்ணயத்தையும் சேவைகளின் தன்மையையும் கருத்திற்கொண்டு சீராகவும் நியாயமான முறையிலும் ஏற்பிசைவு செய்யப்படல் வேண்டும்.

### *3.1.3* நன்கொடை உடன்படிக்கைகள்

I. பெரும்பாலான NPO நன்கொடை நிதிமூலமாக கொடுக்கப்பட வேண்டிய/செய்யப்பட வேண்டிய சேவைக்கு/பணிக்கு தங்களை அர்ப்பணிப்பதற்கு நன்கொடையாளர்களுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களை செய்துகொள்ளும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் எங்கு எப்பொழுது குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை செயற்படுத்துவது என்பது பற்றிய விரிவான விபரத்தை தரும். தொடர்புடைய பாதீடு மற்றும் கட்டுறுப்புக்கள் மற்றும் நிபந்தனைகளின் நிரல், (உதாரணமாக, அறிக்கையிடு தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக,) ஆகியன பெரும்பாலும் செய்துகொண்ட உடன்படிக்கையின் ஒரு முக்கிய பகுதியாக அமையும். அத்துடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு மேலாக, உண்மையான செலவினத்தை அனுமதிக்கப்பட்ட பாதீட்டுடன் ஒத்துப்பார்க்கும் முரண் அறிக்கை, முரண் அறிக்கை கணக்கில் கொண்ட செயல்பாடும் காலமும் பற்றிய முன்னேற்ற அறிக்கை ஆகியனவும் தேவைப்படும். எனவே, இந்த அறிக்கைகள் ஒரு நன்கொடையாளிக்கும் ஒரு NPO விற்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் தேவைப்பாடுகளின் ஒரு முக்கிய பகுதியாக அமையும். இந்த அறிக்கைகளை நிதிக்கூற்றுக்களுடன் வாசிப்பது கொடைவழங்குனர் செயற்பாட்டின் பூர்த்தி மட்டத்தை மதிப்பிடு வதற்கும் உடன்படிக்கைக்குள்ளான நோக்கங்களும் நிபந்தனைகளும் எய்தப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதனை தீர்மானிப்பதற்கும் ஒரு பயனுடைய கருவியாக அமையும்.

II. மட்டுப்படுத்தல்களும் கட்டுப்பாடுகளும் பெரிய நன்கொடை நிறுவனங்களின் நிதிகளுக்கு மாத்திரமல்லாது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தனிநபர்களின் பங்களிப்புக்களுக்கும் இணைக்கப்படும். உதாரணமாக, ஒரு NPO ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டிருந்தாலுங்கூட எழுத்துமூல உடன்படிக்கைகள் இல்லாவிட்டா லும், உடந்தையாளர்களிடையே ஒரு புரிந்துணர்வு இருக்கும். இதன் விளைவாக நிதி திரட்ட லின்போது, அறிவிக்கப்பட்ட நோக்கத்திற்கே நிதியை பயன்படுத்தும் ஒழுக்கரீதியான கட்டுப் பாடு இருப்பதால், அவை மட்டுப்படுத்தப்பட்ட நிதிகளாகவே கருதப்படல் வேண்டும்.

III. நேரடியாக கோரிக்கை விடாது அல்லது பாவிப்பிற்கான கட்டுறுப்புக்களும் நிபந்தனைகளுக்கும் இன்றி பெறப்படும் நன்கொடைகள் மட்டுப்படுத்தப்படாத நிதியங்களாகும். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நிதியங்கள் NPO யின் நோக்கங்களிற்கு உபயோகிக்கப்படும் என்ற எழுத்து மூலமாக அமையாத ஒரு உடன்படிக்கை இருக்கும்.

IV. இதே சந்தர்ப்பத்தில் பெறப்பட்ட நிதியத்தில் எவ்வளவு NPO வின் பொது நிருவாகத்திற்கும் அதன் மத்திய அலுவலக செலவுகளிற்கும் உபயோகிக்கப்படும் என்பது பற்றி தெளிவான வெளிப்பாடு இருத்தலும் வேண்டும்.

### *3.1.4* மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள்

I. ஏறக்குறைய எல்லா NPOகளும் தங்கள் ஒட்டு மொத்த நோக்கங்களிற்குள்ளேயே ஒவ்வொரு குறிப்பிட்ட நோக்கத்தின் உபயோகத்திற்கென நிதியங்கள் வைத்திருக்கும். இந்நோக்கங்கள் நன்கொடையாளர்களினால் விதிக்கப்பட்டு (அரசு அல்லது ஏனைய எல்லா நன் கொடையாளர்களாயினுஞ்சரி) ஒரு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அல்லது நிதி சேகரிப்பு செயல்பாட்டின்போது அல்லது தொடர்பு சாதனம் அல்லது அம்மாதிரியான அறிவிப் பின்மூலம் சுய பிரகடனங்கள் செய்து நோக்கங்களை தாங்களே பொறுப்பேற்றுக்கொண்டிருக்கலாம். இப்படியாக குறிப்பிட்ட உபயோக நிதியங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிதிகளாய் இருப்பதால், அவைகள் தனியாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். மட்டுப்பட்ட நிதியங்களின் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் மூல நிதியத்தைப் போன்றே மூல மட்டுப்படுத்தல் கட்டுறுப்புக்கள் வேறுவிதமாக சொல்லியிருந்தாலொழிய வழக்கமாக மட்டுப் படுத்தப்படும் கட்டுறுப்புக்களின் தாக்கத்திற்கு பொதுவாக ஆட்படும்.

II. ஒரு அமைப்பின் நன்மைக்காக வைத்திருக்கப்படும் மூலதன நிதியமான "அறக்கொடை", ஒரு வித்தியாசமான மட்டுப்படுத்தப்பட்ட நிதியமாகும். வழக்கமாக அம்மாதிரியான நிதியம் நிதியத்திற்கு வந்த வருமானமாக கருதி

செலவழிக்கப்பட மாட்டாது. எனினும் அம்மாதிரியான மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருமானம் அமைப்பின் மட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்திற்காக அல் லது வேறு நோக்கத்திற்காக உபயோகிக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் ஆட்சிச் சபை அறக் கொடை மூலதனத்தை வருமானமாக மாற்றும் விருப்புத் தேர்வு அதிகாரத்தை கொண்டிருக்கக் கூடும். அப்படியான சந்தர்ப்பத்தில் அவ்வாறான அதிகாரம் உபயோகிக்கப்பட்டால், தொடர் புடைய நிதியங்கள் மட்டுப்பட்ட அல்லது மட்டுப்படாத வருமான ஆட்சிச் சபையின் தீர்மா னத்தைப் பொருத்து மாறுபடும். எவ்வாறாயினும், அறக்கொடை நிதியம் மட்டுப்படுத்தப்பட்ட நிதியமாகவிருப்பதால், அது நிதிக் கூற்றுக்களில் தனியே கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

*3.1.5* ***மட்டுப்படுத்தப்படாத நிதியங்கள்***

I. பல NPO களிடம் அவற்றின் ஆட்சி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு பொது நோக்கங்களுக்கு உபயோகிப்பதற்காக வளங்கள் இருக்கும். இது NPO க்களின் "மட்டுப்படுத்தப்படாத" அல்லது "பொது" நிதியமாகும். மட்டுப்படுத்தப்படாத நிதியத்தின் சொத்துக்களிலிருந்து கிடைக் கும் வருமானம் மட்டுப்படுத்தப்படாத வருமானமாகும்.

II. NPO களின் ஆட்சிச் சபை மட்டுப்படுத்தப்படாத நிதியங்களின் ஒரு பகுதியை வருங்காலத் தில் குறிப்பிட்ட நோக்கங்களிற்கு உபயோகிப்பதற்காக ஒதுக்கி வைக்கக்கூடும். ஆட்சிச் சபைக்கு எதிர்காலத்தில் மட்டுப்படுத்தப்படாத நிதியங்களிற்குள்ளேயே அத்தகைய நிதியங் களை மீள் நியமிக்கக்கூடிய அதிகாரம் இருப்பதால், அவை "நோக்கம் நிர்ணயிக்கப்பட்ட நிதி யங்கள் (Designated Funds)" என வர்ணிக்கப்படல் வேண்டும். எனவே, இவை NPO களின் மட்டுப்படுத்தப்படாத நிதியங்களின் ஒரு பகுதியாக கணக்கிடப்படல் வேண்டும்.

*3.1.6* ***திரண்ட நிதியம்***

I. ஒக்ஸ்போர்ட் கணக்கீடு அகராதி (Oxford Dictionary of Accounting) திரண்ட நிதியத்தை "ஒரு இலாப நோக்கற்ற அமைப்பு வைத்திருக்கும் நிதியத்தின் செலவிற்கு மேலான வரவு செலவு பதிவு செய்யப்படுவதும் வருமானத்திற்கு மேலான செலவு பற்றாக்குறை வரவு பதிவு செய்யப்படுவதும் மற்ற நிதியமாக பொருள் வரையறை செய்கின்றது. எந்த நேரத்திலும் திரண்ட நிதியங்களின் பெறுமதியை அமைப்பின் நிகரச் சொத்துக்களை மதிப்பிட்டு (சொத்துக் கள்-பரிப்புக்கள்) கணிப்பிடலாம். திரண்ட நிதியம் இலாப நோக்கில் தொழிற்படும் அமைப்பின் மூலதனத்திற்கு சமானமாகும்.".

II. எனினும், NPO களிற்கு உரிமை நாட்டம் அல்லது வணிக நிறுவனங்களைப் போன்று இலாப நாட்டம் இல்லாதுபோனாலும் "ஒரு குறிப்பிட்ட காலத்தில் வளங்களின் உட்பாய்ச்சல்களிற்கும் வெளிப்பாய்ச்சல்களிற்குமிடையேயான உறவை பிரதிபலிக்கும் வண்ணம்" மூலதன பேணுகை கருத்துருவை கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஒரு அமைப்பு எந்தவொரு காலக்கட்டத்தி லும், முன்னைய காலங்களில் பெறப்பட்டு ஆனால் உபயோகிக்கபடாமலுள்ள வளங்களை உபயோகிக்கவோ அல்லது எதிர்கால உபயோகத்திற்காக வளங்களை ஒதுக்கிவைக்கவோ கூடும்.

III. ஒரு NPO வின் திரண்ட நிதியத்தின் பேணுகை அதன் நிதிய மூலதனத்தின் பேணுகை அடிப் படையில் அமைந்ததாகும். ஒரு NPO வின் மூலதனம் பேணப்படுவது அதன் காலமுடிவில் நிகர சொத்துக்களின் நிதிப்பெறுமதி கால ஆரம்பத்தின் நிகரச் சொத்துக்களின் நிதிப் பெறுமதிக்கு சமமாக அல்லது அதைவிட விஞ்சியிருக்கும்போது ஆகும்.

IV. ஒரு NPO அதன் திரண்ட நிதியப் பேணுகையில் தோல்வியுற்றால், அதன் தொடர்ந்து சேவைப்புரியும் இயலுமை சுருங்குவதுடன் அதன் எதிர்கால பயனாளிகளிற்கு சேவையாற்றும் இயலுமையும் பாதிக்கப்படும். குறைபாட்டை தடுப்பதற்காக சேகரிப்புமூலம் வருமானத்தை தேடும் இயலுமை இருந்தாலொழிய, எதிர்கால நிதியளிப்பவர்கள் குறைப்பாட்டை நிவர்த்திக் கக்கூடும்.

V. மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் ஒரு NPO இன் திரண்ட நிதியின் ஒரு முக்கிய கூறாகும். எனவே தான், மட்டுப்படுத்தப்பட்ட திரண்ட நிதியத்தையும் பொது திரண்ட நிதியத்தையும் வித்தியாசப் படுத்திக் காட்டுவது முக்கியத்துவமாகும்.

*3.1.7* ***ஆட்சிச் சபை***

I. ஒரு NPO இன் ஆட்சிச் சபை ஒரு கம்பனியின் இயக்குநர்கள் குழுமம் போன்றதாகும். எனினும், ஒரு NPO ஐ பொருத்தமட்டில் இது ஆளுனர் குழுமம் அல்லது அங்கத்துவர்களின் சபை அல்லது வேறு பொருத்த மான பெயரால் குறிக்கப்படலாம்.

*3.2* **பயனாளிகளும் அவர்களின் தகவற் தேவைகளும்**

*3.2.1* NPO களின் நிதிக்கூற்றுக்கள் வேறுபட்ட நபர்களால் (சட்ட அல்லது கூட்டுத்தாபன சபைகள், ஏனைய NPO கள் அல்லது தனி நபர்கள்) வேறுபட்ட நோக்கங்களிற்கு உபயோகிப்பதுடன் அவர்களின் தகவல் தேவைப்பாடுகளும் கணிசமாக

வேறுபடும். கூட்டிணைக்கப்பட்ட துறை போலன்றி, NPO க்கள் உரிமையாளர்களையோ முதலீட்டாளர்களையோ கொண்டிருப்பதில்லை. NPO இன் நிதிக்கூற்றுக்களை உபயோகிக்கும் பொது குழுக்களாவன வளங்களின் வழங்குனர்கள் அல்லது பங்களிப்பவர்கள் (வேறுபட்ட கொடையாளி குழுக்கள்) பயன்பெறுவோர்கள் வழங்குநர்கள் (Suppliers)/சென்மதி கடன்கொடுப்போர்கள், தொழிலாளிகள் மற்றும் அதிகாரிகள் ஆவர். சில NPO க்கள் பயனாளிகளின் முக்கிய குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களை கொண் டிருக்கும். ஏனையவை அவை ஒத்துழைக்கும் அமைப்புக்களை- அவர்கள் நிதிக்கூற்றக்களின் முக் கிய பாவனையாளர்கள்- கொண்டிருக்கும்.

3.2.2 வேறுபட்ட பாவனையாளர்களின் தகவல் தேவைகளிற்கு உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**அங்கத்தவர்கள்**
* கொடுக்கப்பட்ட வழிகாட்டல்களிற்கமைய நிதிகள் உபயோகிக்கப்பட் டுள்ளனவா?
* NPO ஆட்சி விதிகளிற்கமைய (துணைச் சட்டங்கள் அல்லது அவை போன்ற) நடாத்தப்படுகின்றதா?
* அடிப்படையான சட்டம் அல்லது ஒழுங்குவிதிகள் எவை மற்றும் அவை நிறைவேற்றப்படுகின்றனவா?

**வளம் வழங்குநர்கள்**
* NPO ஆனது உடன்பட்ட பயனாளிகளின் நோக்கங்களை அடை வதற்கான தகைமையுடையதா?
* NPO நல்ல செயன்திறனை உடையதா?
* NPO வினைத்திறனுடனும் விளைவுத்திறனுடனும் நடாத்தப்படுகின்றதா?
* NPO பொறுப்புக் கூறலுக்கு ஆளானதா? ஆதரவை நீடிக்க அல்லது தொடர வேண்டுமா?
* நிதியங்கள் ஒப்புக்கொண்ட வகையில் மற்றும் இனங்காணப்பட்ட NPO ஆணைக்குள் உபயோகிக்கப்படுகின்றனவா?
* NPO ஒப்புக்கொண்ட மட்டுப்படுத்தல்கள் மற்றும் தேவைப்பாடுகளிற்கிணங்க நடந்துகொள்கின்றதா?
* NPO ஒப்புக்கொண்டவாறு அமுலாக்குவதற்கு செயற்றிட்டத்தை, கட்ட மைப்பை மற்றும்/அல்லது தகைமையைக் கொண்டுள்ளதா?

**பயனாளிகள்**
* NPO கொடுக்கப்பட்ட வழிகாட்டல்களிற்கமைய ஆதரவு/சேவைகளை வழங்குகின்றதா?
* NPO எதிர்காலத்தில் ஆதரவை/சேவைகளை வழங்கும் இயலுமையை கொண்டுள்ளதா?
* முறைமைகள் எதிர்பார்த்தவாறு தொழிற்படுகின்றனவா?

**சேவை வழங்குநர்கள்/ கடன் கொடுநர்கள்**
* NPO நம்பகரமானதா?
* அது உரிய திகதிக்குள் தீர்வு செய்யும் வல்லமை உடையதா?

**தொழிலாளிகள்**
* NPO பாதுக்காப்போடு பணிப்புரிய உகந்ததா?
* NPO சம்பளம் மற்றும் ஏனைய ஒப்புக்கொண்ட பயன்களை உரிய காலத்தில் கொடுக்கின்றதா?
* NPO குறிக்கப்பட்ட நோக்கங்களை எய்துவதற்கும் சேவைகளை வழங்குவதற்கும் நிதி சார்பான வல்லமையை உடையதா ?

**அதிகார சபைகள்**
* NPO பிரயோக சட்டத் தேவைகளுடன் இணங்குகின்றதா? (பதிவு/வரி/அறிக்கை/தேவைப்பாடுகள் முதலியன)
* NPO இன் தொழிற்பாடுகள் மேலதிக ஒழுங்குவிதிக்கு உட்படுத்தப்பட வேண்டுமா?
* அதன் செயற்பாடுகளிலும் வளங்களை உபயோகிப்பதிலும் வெளிப்பாட் டுத்தன்மை உண்டா?

**பங்காளர்கள்**
* இருந்த நிதிகள் ஒப்புக்கொண்ட நோக்கங்கள்/வழிகாட்டல்களிற்கமைய உபயோகிக்கப் பட்டுள்ளனவா?

### 3.3 பயனுடைய நிதித் தகவல்களின் தரமான குணாம்சங்கள்

3.3.1 நிதித் தகவல் பயனுடையதாய் இருக்கவேண்டுமாயின், அது பொருத்தமானதாயும் எதை பிரதிபலிப் பதாக காட்டுகின்றதோ அதை நம்பகமாக பிரதிபலிப்பதாகவும் இருத்தல் வேண்டும். நிதி தகவலின் பயன், அது ஒப்பீடு செய்வதற்கும், சாட்சிபடுத்துவதற்கும், காலத்திற்கும் மற்றும் விளங்கிக்கொள் வதற்கும் உகந்ததாய் இருந்தால், அதிகரிக்கும்.

**அடிப்படையான தர குணாம்சங்கள்**

3.3.2 அடிப்படையான தர குணாம்சங்கள் என்பது தொடர்புடையதாகவும் நம்பகரமாக முன்னிலைப்படுத்தலாகவும் இருத்தல்.

**தொடர்புடைமை**

3.3.3 தொடர்புடைய நிதித் தகவல் பயனாளிகள் தீர்மானங்களில் ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ண வல்லது. சில பயனாளிகள் வித்தியாசத்தை விரும்பாது இருந்தாலும் அல்லது வேறு மூலகங் களிருந்து அதை தெரிந்திருந்தாலும் தகவல் வித்தியாசத்தை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடும்.

3.3.4 நிதித்தகவல், அது எதிர்பார்க்கக்கூடிய பெறுமதியை, உறுதிப்படுத்தல் பெறுமதியை அல்லது இரண்டையும் கொண்டிருக்கும்பட்சத்து வித்தியாசத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

3.3.5 நிதித்தகவல் எதிர்வுகூறக்கூடிய பெறுமதியை கொண்டிருப்பது எப்போதென்றால், உபயோகிப்போர்கள் எதிர்கால விளைவுகளை எதிர்வுகூறுவதற்காக தகவலை உள்ளீடாக உபயோகிக்கக்கூடியதாய் இருக்கும்போது ஆகும். நிதித்தகவல் முற்கணிப்பு பெறுமதியை கொண்டிருப்பதற்கு ஒரு முற்கணிப் பாகவோ எதிர்வுகூறலாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. முற்கணிப்புடனான நிதித்தகவலை உபயோகிக்கப்போர் தங்களுக்கு தேவையான முற்கணிப்பை மேற்கொள்வதற்கு உபயோகிப்பார் கள்.

3.3.6 நிதித்தகவல் முன்னைய மதிப்பீடுகளின் பின்னூட்டற் தகவலை தருமாயின் (உறுதிப்படுத்தல் அல் லது மாற்றங்கள்) அது உறுதிப்பாட்டு பெறுமதியைக் கொண்டுள்ளது.

3.3.7 நிதித்தகவலின் முற்கணிப்பு பெறுமதியும் உறுதிப்பாட்டு பெறுமதியும் ஒன்றோடொன்று தொடர்புடை யன. முற்கணிப்பு பெறுமதியைத் தரும். நிதித்தகவல் உறுதிப்பாட்டு பெறுமதியையும் உள்ளடக்கி யிருக்கும். உதாரணமாக, எதிர்வரும் வருடங்களின் வருமான முற்கணிப்பிற்கு அடிப்படையாக உப யோகிக்கக்கூடிய நடப்புக் கால வருமானத் தகவல், கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நடப் புக்கால வருமான முற்கணிப்புக்களுடன் ஒப்பீடு செய்யப்படலாம். இந்த ஒப்பீட்டு பெறுபேறுகள் உபயோகிப்போர்களுக்கு முன்னைய முற்கணிப்புக்களின் செயன்முறைகளை திருத்தவும் மேம்படுத்தவும் உதவ முடியும்.

**பொருண்மை**

3.3.8 உபயோகிப்போர் ஒரு குறிப்பிட்ட நிறுவனம்பற்றி நிதித்தகவலின் அடிப்படையில் எடுக்கும் தீர்மா னங்களில், தகவல் விடுபடுதல் அல்லது அது தவறாக கூறப்படுதல் செல்வாக்கு செலுத்துமாயின், அது பொருண்மையானதாகும். அதாவது பொருண்மையானது ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தோடு தொடர்புடையதாகும். நிறுவனத்தின் நிதி அறிக்கையில் காணப்படும் உருப்படிகளின் தன்மை, அளவு (பருமன்) அல்லது இரண்டும்பற்றிய தகவலோடு தொடர்புடையது. ஆகவே, பொருண்மைக் கான ஒரே சீரான கணியவிலக்கெல்லையை எண்ணிக்கையில் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கு நிர்ணயிக்கவோ அல்லது கணிப்பிடவோ முடியாது.

**நேர்மையான முன்னிலைப்படுத்தல்**

3.3.9 நிதி அறிக்கைகள் பொருளாதார நிகழ்வுகளை வார்த்தைகளிலும் எண்ணிக்கைகளிலும் பிரதிபலிக் கின்றன. அவை பயனுடையதாய் இருப்பதற்கு நிதித்தகவல் நிகழ்வை பிரதிபலிப்பது மட்டுமல்லாது அது எதை பிரதிபலிக்க விரும்புகின்றதோ அதை நேர்மையாக முன்னிலைப்படுத்த வேண்டும். பூரணமான நேர்மையான முன்னிலைப்படுத்தலிற்கு ஒரு தோற்றப்பாடு மூன்று குணாம்சங்களை கொண்டிருக்கும். அது பூரணத்துவமாயும் ஒரு நடுநிலையுடையதாயும் வழுக்குன்றியும் இருக்கும். பூரணத்துவமாய் இருப்பது என்றும் அடைய முடியாத அருமையானதாய் இருக்கலாம். உண்மை யான நோக்கமாவது அந்த குணாம்சங்களை முடிந்தளவிற்கு அதிகளவில் எய்துவதாகும்.

3.3.10 ஒரு முழுமையான தோற்றப்பாடானது ஒரு பாவனையாளர் தரப்பட்டுள்ள தோற்றப்பாட்டை விளங்கிக்கொள்வதற்கு அவசியமான வர்ணிப்புக்கள் மற்றும் விளக்கங்கள் உள்ளடங்கலாக, எல்லா தகவல்களையும் உள்ளடக்கும். உதாரணமாக,குழும சொத்துக்களின் தொகுதியொன்றின் முழுமை யான தோற்றப்பாடு குறைந்தபட்சம் குழுமத்திலுள்ள சகல சொத்துக்களின் தன்மை பற்றிய விபரம், அவற்றின் எண்ணிக்கையிலான வர்ணிப்பு, எதை பிரதிபலித்துள்ளது (உதாரணமாக, ஆரம்ப கிர யம், செம்மைப்படுத்தப்பட்ட கிரயம் அல்லது சீர்மதிப்பு) போன்றவற்றை உள்ளடக்கும்.

சில உருப்படிகளுக்கு முழுமையான தோற்றப்படானது, உருப்படிகளின் தரம் மற்றும் தரம் பற்றிய விளக்கம் அவற்றின் தன்மையும் தரத்தையும் பாதிக்கக்கூடிய காரணிகளும் சூழ்நிலைகளும், எண் ரீதியான வர்ணிப்பிற்காக உபயோகப்படுத்தும் செயன்முறை ஆகியவைபற்றிய விளக்கங்களையும் உள்ளடக்கும்.

3.3.11 ஒரு நடுநிலையான தோற்றப்பாடு நிதித்தகவலை தெரிவுசெய்வதிலோ அல்லது முன்னிலைப்படுத் துவதிலோ பக்கச்சார்பற்றதாய் இருக்கும். ஒரு நடுநிலைத் தோற்றப்பாடானது உபயோகிப்பவர்கள் நிதித்தகவலை அனுகூலமாகவோ அல்லது பிரதிகூலமாகவோ பெறும் உறுதிப்பாட்டை அதிகரிக் கும் நோக்கோடு, ஒருதலைச் சார்பாகவோ, வலு ஏற்றப்பட்டோ, அமுத்தப்படுத்தப்பட்டோ அல்லது வேறுவழியில் திரிபுபடுத்தப்பட்டோ இருக்காது. நடுநிலை தகவல் என்பது நோக்கமற்றதாகவோ, நடத்தையில் செல்வாக்குப்படுத்தாததாகவோ இருத்தல் ஆகாது. மாறாக தொடர்புடைய நிதித்தகவல்கள் உபயோகிப்பவர்களின் தீர்மானங்களில் ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணும்.

3.3.12 நியாயமான முன்னிலைப்படுத்தல் எல்லா அம்சங்களிலும் துல்லியமாய இருக்குமென்பதில்லை. வழுவற்றது என்பதன் கருத்தானது, தோற்றப்பாட்டின் வர்ணிப்பில் வழுக்கள் இல்லை அல்லது தகவல் விடுபடவில்லை என்பதுடன், அறிக்கையிடப்பட்டுள்ள தகவலின் தயாரிப்புச் செய்முறை வழுக் கள் இல்லாது தேர்வு செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதாகும். இதன் அடிப்படையில் வழுவின்மை என்பது எல்லா அம்சங்களிலும் பூரணமாக துல்லியமானது என்பது அல்ல. உதாரணமாக, ஒரு அவதானிக்க முடியாத விலையின் அல்லது பெறுமதியின் மதிப்பீடு துல்லியமானது அல்லது துல்லியமற்றது என தீர்மானிக்க முடியாது. எனினும், தொகை மதிப்பீடு என தெளிவாகவும் துல்லியமாகவும் வர்ணிக்கப்பட்டும், மதிப்பீட்டு செய்முறையின் தன்மையும் வரையறையும் விளக்கப்பட்டும், மதிப்பீட்டை எய்துவதற்கு தெரிவுசெய்து உபயோகிக்கப்பட்ட செய்முறையில் வழுக்கள் இல்லாத பட்சத்தும், மதிப்பீட்டின் பிரதிநிதித்துவம் நேர்மையானது என கூறலாம்.

3.3.13 நேர்மையான பிரதிநிதித்துவம் தானே பயனுடைய தகவலை தருமென்பதற்கில்லை. உதாரணமாக, ஒரு அறிக்கைவிடும் நிறுவனம் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றை அரசு மானியம்மூலம் பெறக்கூடும். இதை நிறுவனம் கிரயமில்லாது பெற்றது என்று அறிக்கையிடுதல் நேர்மையானது. ஆனால் அந்த தகவல் பெரும்பாலும் பயனுடையதாக இருக்காது. இன்னும் கொஞ்சம் நுண்ணியமான உதாரணமாக ஒரு சொத்தின் அது முன்கொண்டுசெல்லப்படும் தொகையை சொத்தின் சேதவிழப்பாக செம்மையாக்கம் செய்வதற்காக உபயோகிக்கப்படும் தொகையின் மதிப்பீட்டை கூறலாம். நிறுவனம் தக்க செய்முறையை உபயோகித்திருந்தும், மதிப்பீடு தக்கவாறு வர்ணிக்கப்பட்டிருந்தும் மதிப்பீட்டை கணிசமாக பாதிக்கும் நிச்சயமற்ற தன்மை களை விளக்கப்பட்டுமிருந்தால் மதிப்பீட்டை நேர்மையாக பிரதிநிதித்துவமாக கருதலாம். எனினும், அத்தகைய மதிப்பீட்டின் நிச்சயமற்றதன்மை மட்டம் போதியளவிற்கு உயர்வாயிருந்தால் அந்த மதிப்பீடு குறிப்பாக பயனுடையதாகாது. அதாவது, சொத்து நேர்மையாக பிரதிநிதித்துவம்பட்டிருப்ப தின் பொருத்தத்தன்மை கேள்விக்குரியதாகும். கூடுதலான அளவிற்கு நேர்மையாக பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு மாற்றுவழியில்லாவிடத்து, அந்த மதிப்பீடு கிடைக்கக்கூடிய சிறப்பான தகவலை தரக்கூடும்.

**அடிப்படை தரக் குணாம்சங்களை பிரயோகித்தல்**

3.3.14 தகவல் பயனுடையதாய் இருக்கவேண்டுமானால், அது தொடர்புடையதாகவும் நேர்மையான பிரதி நிதித்துவத்தை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். தொடர்பற்ற தோற்றப்பாட்டின் நேர்மையான பிரதிநிதித்துவமோ அல்லது தொடர்புடைய தோற்றப்பாட்டின் நேர்மையற்ற பிரதிநிதித்துவமோ உப யோகிப்பவர்கள் நல்ல தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவமாட்டாது.

3.3.15 அடிப்படை தரக் குணாம்சங்களை பிரயோகத்திற்கான அதி வினைத்திறனும் விளைவுத்திறனுமுடைய செய்முறை கீழ்க்கண்டவாறு அமையும். (குணாம்சங்களை அதிகரிக்கும் விளைவுகளையோ கிரயக் கட்டுப்பாட்டையோ இந்த உதாரணத்தில் கணக்கில் கொள்ளவில்லை) முதலாவதாக, அறிக்கையிடும் நிறுவனத்தின் நிதித் தகவலின் பாவனையாளர்களிற்கு பயனுடையதாக இருத்தல் சாத்தியமான பொருளாதார தோற்றப்பாட்டை இனங்காணவும். இரண்டாவதாக, தோற்றப் பாடு பற்றி நேர்மையாக பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தொடர்புடைய தகவல் இருந்தால், அதை இனங்காணவும். மூன்றாவதாக, தேவைப்படும் தகவலின் இருப்பையும் அது நேர்மையாக பிரதி நிதித்துவப்படுத்துமா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அப்படி தீர்மானிக்கப்பட்டால், அடிப்படை தரக் குணாம்சங்களை பூர்த்திசெய்யும் செய்முறை (படிமுறை) அந்தக் கட்டத்தில் முடிவிற்கு வரும். அப்படி இல்லாதிருந்தால், அடுத்துவரும் மிகவும் தொடர்புடைய பொருத்தமான தகவலிற்கு செய்முறை தொடரப்படும்.

**தர குணாம்சங்களை அதிகரித்தல்**

3.3.16 ஒப்பீடு, அறுதியிடற்றகவு, காலத்தோடு இருத்தல் மற்றும் விளங்கிக்கொள்ளல் ஆகியன தர குணாம்சங்கள் தொடர்புடையதும் நேர்மையாக முன்னிலைப்படுத்தப்படுத்துவமான தகவலின் பயனை அதிகரிக்கும். அதிகரிக்கப்படும் தர ரீதியான குணாம்சங்கள் இரண்டு வழிகளும் ஒரு தோற்றப்பாட்டை தொடர்புடையதாகவும் நேர்மையாகவும் முன்னிலைப்படுத்தலிற்கு தக்கவாய் இருக்கும்பட்சத்து, எந்த வழியைப் பின்பற்றலாமென தீர்மானிப்பதற்கு உதவும்.

**ஒப்பிடத்தகவு**

3.3.17 பயன்படுத்துபவர்களின் தீர்மானங்கள் மாற்றுவழிகளிடையே எதைத் தெரிவு செய்வது என்பதனை உள்ளடக்கும். உதாரணமாக, ஒரு முதலீட்டை விற்பதா அல்லது வைத்திருப்பதா அல்லது ஒரு நிறுவனத்திலா அல்லது பிறிதொரு நிறுவனத்திலா முதலீடு செய்வது என தீர்மானித்தல். இதன் விளைவாக ஒரு அறிக்கையிடு நிறுவனம் பற்றிய தகவல், அவை ஏனைய நிறுவனங்கள் பற்றிய அதே மாதிரியான தகவலோடு அல்லது நிறுவனத்தின் ஏனைய காலம் அல்லது திகதியில் அதே மாதிரியான தகவலோடு ஒப்பீடு செய்ய மிகவும் பயனுடையதாக இருக்கும்.

3.3.18 ஒப்பீட்டு தர குணாம்சம் உபயோகிப்பவர்களிற்கு உருப்படிகளிடையே ஒரே மாதிரியான தன்மை அல்லது அவைகளுக்கிடையே வித்தியாசத்தன்மையை இனங்கண்டு விளங்கி கொள்ளும் இயலுமையை கொடுக்கின்றது. ஏனைய தர குணாம்சங்களை போலன்றி ஒப்பீடு ஒரு தனி உருப்படியோடு மாத்திரமே தொடர்புடையதாய் இருக்காது. ஒப்பீடு குறைந்தபட்சம் இரு உருப்படிகளை தேவைப்படுத்தும்.

3.3.19 முரண்பாடின்மை (கொள்கை மாறாததன்மை) ஒப்பீட்டோடு தொடர்புடையதாய் இருந்தாலும் அவை ஒன்றல்ல. கொள்கைமாறாமை என்பது ஒரே மாதிரியான உருப்படிகளிற்கு அறிக்கையிடும் நிறுவனத்தின் உள்ளே காலத்திற்குக்காலம் அல்லது ஒரே காலத்தில் பல நிறுவனங்களிடையே ஒரே செய்முறையை உபயோகிப்பதைக் குறிக்கும். ஒப்பீடு ஒரு இலக்காகும். கொள்கைமாறாமை அந்த இலக்கை எய்துவதற்கு உதவுகின்றது.

3.3.20 ஒப்பீடு என்பது ஒரு சீரான தன்மை அல்ல. தகவல் ஒப்பீட்டிற்கு உகந்ததாய் இருக்க வேண்டுமாயின் ஒரே மாதிரியான உருப்படிகள் ஒரே மாதிரியாயும் வேறுபட்ட உருப்படிகளானால், அவை வேறுபட்டும் இருத்தல் வேண்டும். வேறுபாடான உருப்படிகளை ஒரே மாதிரியான உருப்படிகளாகவோ அல்லது வேறுபாடற்ற உருப்படிகளை ஒரே மாதிரியான உருப்படிகளாகவோ காட்டப்படு வதினால் நிதித் தகவலின் ஒப்பிடற்றகவு அதிகரிக்கப்படுவதில்லை.

3.3.21 அடிப்படை தர குணாம்சங்களை பூர்த்தி செய்வதன்மூலம் ஓரளவுக்கு ஒப்பிடற்றகவினை அடைய லாம். ஒரு பொருளாதார தோற்றப்பாட்டின் நேர்மையான பிரதிநிதித்துவப்படுத்தல் ஓரளவிற்கு இயற்கையாகவே ஒப்பீட்டுத்தன்மையை கொண்டிருக்கும். ஏனெனில், பிறிதொரு அறிக்கை நிறுவனத்தின் ஒரே மாதிரியான பொருளாதார தோற்றப்பாட்டின் நேர்மையான பிரதிநிதித்துவத்துடன் ஒப்பீடு செய்யலாம்.

3.3.22 தனித்த பொருளாதார தோற்றப்பாடொன்று பல வழிகளில் நேர்மையாக பிரதிநிதித்துவப்படுத்த படலாமாயினும், ஒரே மாதிரியான நிகழ்விற்கு வேறுப்பட்ட கணக்கீட்டு முறைகளை அனுமதிப்பது ஒப்பிடற்றகவினை குறைவடையச் செய்யும்

**அறுதியிடற்றகவு**

3.3.23 அறுதியிடற்றகவலை பாவனையாளர்களிற்கு பொருளாதார தோற்றப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் தகவல் நம்பகரமானது என்ற உறுதிப்பாட்டை தருகின்றது. அறுதியிடற்றகவு என்பது புரிந்துணர்வும் வேறுபட்ட தயவின் உணர்வும் கொண்ட வேறுபட்ட அவதானிப்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட தோற்றப்பாடு நேர்மையான பிரதிநிதித்துவமாகும் என்ற பூரணமான உடன்பாட்டிற்கு வரமுடியாத போதிலும், ஒரு பொது இசைவை அடைய துணைபுரிவதாகும். அறுதியிடற்றகவினை அடைவதற்கு கணியப்படுத்தப்பட்ட தகவல்கள் ஒரு தனியான மதிப்பீட்டை கொண்டிருக்கவேண்டுமென்பதில்லை. ஒரு வீச்சிற்கான சாத்தியமான தொகைகளும் அவற்றின் தொடர்புபட்ட நிகழ்தகவுகளும் அறுதியிடப் படலாம்.

3.3.24 அறுதியிடலானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அமையலாம். நேரடியான அறுதி யிடல் என்பது ஒரு தொகையை அல்லது வேறு பிரதிநிதித்துவத்தை நேரடியான அவதானிப்புமூலம் மேற்கொள்வதாகும். உதாரணமாக, காசை எண்ணுதல். மறைமுக உறுதிப்பாடு என்பது ஒரு மாதிரிக்கு, சூத்திரத்திற்கு அல்லது வேறு நுட்ப வழிக்கான உள்ளீட்டை அதே செய்முறையை உப யோகித்து வெளியீட்டை மீள கணிப்பதாகும். இதற்கான உதாரணம் தொக்கின் முன்கொணரற் தொகையை உள்ளீட்டை பரீட்சிப்பதன்மூலமும் (எண்ணிக்கையும் கிரயமும்) மற்றும் இறுதித் தொக்கை அதே கிரயப் பாய்வு எடுகோளை உபயோகித்து மீள் கணிப்பிடுவதன்மூலமும் (உதாரணம் முதல் உள்வந்தது முதன் வெளியானது முறை) மேற்கொள்ளலாகும்.

3.3.25 சில விளக்கங்களை மற்றும் முன்னோக்கிய நிதித்தகவல்களை ஒரு குறிப்பிட்ட எதிர்காலம் வரும் வரையிலாவது அறுதியிட முடியாது இருக்கக்கூடும். உபயோகிப்போர்கள் இந்த தகவலை உபயோகிப்பதா இல்லையாவென தீர்மானிக்க உதவும் வகையில் தகவலிற்கு ஆதாரமான எடுகோள்கள், தகவல் சேகரிப்பு முறைகள் மற்றும் தகவலை ஆதரிக்கும் ஏனைய காரணிகள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துதல் வழக்கமாக அவசியமாகும்.

**கால நிர்ணயம்(காலத்தோடு இருத்தல்)**

3.3.26 தீர்மானிப்பவர்கள் அவர்களின் தீர்மானங்களில் செல்வாக்கை உண்டுபண்ணும் வகையிலமைந்த தகவல்களை காலத்தோடு பெறுதல் கால நிர்ணயமாகும். பொதுவாக தகவல் பழமையானதாய் இருக்குமளவிற்கு அதன் பயன்பாடும் குறைவாகவே இருக்கும். எனினும், சில தகவல்கள் அறிக்கையிடல் முடிவுத்திகதிக்கு பிந்தியும் காலத்தோடான தகவலாய் இருக்கக்கூடும். ஏனெனில், உதாரணமாக, சில உபயோகிப்பவர்கள் சொத்துக்களின் போக்கை இனங்காண வேண்டி தேவைப்படக் கூடும்.

**விளங்கிக்கொள்ளற்றகவு**

3.3.27 தகவல்களை தெளிவானதும் சுருக்கமானதுமான வகைப்படுத்தல், குணாம்சபடுத்தல் மற்றும் முன்னிலைப்படுத்தல் அவற்றை விளங்கிக்கொள்ளக்கூடியதாய் ஆக்குகின்றது.

3.3.28 சில தோற்றப்பாடுகள் இயற்கையாகவே சிக்கலாயும் இலகுவாக புரிந்துக்கொள்ள செய்யப்பட முடி யாததாகவும் இருக்கும். இம்மாதிரியான தோற்றப்பாடுகளின் தகவல்களை நிதி அறிக்கையிலிருந்து தவிர்த்தல் தகவல்களை இலகுவாய் புரிந்து கொள்வதற்கு தோதுவாய் இருக்கும். எனினும், அவ்வாறான அறிக்கைகள் பூரணமற்றதாகவும் தவறாக வழிநடத்தும் சாத்தியப்பாட்டையும் கொண்ட தாகவும் இருக்கும்.

3.3.29 நிதி அறிக்கைகள் வணிக மற்றும் பொருளாதார செயற்பாடுகள் பற்றி நியாயமான அறிவும் தகவல்களை சீராக ஆய்வு செய்யும் திறனும்பெற்ற உபயோகிப்பவர்களுக்காக தயாரிக்கப்படுகின்றன. சில நேரங்களில் தகவலின் நல்ல அறிவையும் சீராக ஆய்வு செய்யும் திறனையும் கொண்ட உபயோகிப்பவர்கள் சிக்கலான பொருளாதார தோற்றப்பாடுகளை புரிந்துகொள்வதற்காக ஆலோசகர்களின் உதவியை நாடலாம்.

**தரக் குணாம்சங்களின் அதிகரிப்பை பிரயோகித்தல்**

3.3.30 தரமான குணாம்சங்களின் அதிகரிப்பை முடிந்தமட்டும் அதிகரிக்க வேண்டும். எனினும், தகவல் தொடர்பற்றதாக அல்லது நேர்மையாக பிரதிநிதித்துவப்படுத்துவதாக இல்லாதபோது, தர ரீதியான குணாம்சங்களின் அதிகரிப்பு, தனிமையாகவோ அல்லது ஒரு குழுமமாகவோ தகவலை பயனுடை யதாக மாற்றாது.

3.3.31 தரமான குணாம்சங்களின் அதிகரிப்பை பிரயோகித்தல் பரஸ்பர தொடர்பாடல் செயலாததால், அது ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறையை பின்பற்றுவதில்லை. சிலவேளைகளில் ஒரு குணாம்சத்தை அதிக ரிப்பதற்காக பிறிதொரு குணாம்சத்தை குறைக்கவேண்டி வரலாம். உதாரணமாக, தொலை நோக்குப்பார்வையில் தொடர்புடமையையும் நேர்மையான பிரதிநிதித்துவப்படுத்தலையும் மேம்படுத்துவதற்காக ஒரு புதிய நிதி அறிக்கையிடல் நியமத்தை உபயோகிக்கும்பட்சத்து ஒப்பிடற்றகவில் தற்காலிக குறைப்பீடு தேவைப்படலாம்; பொருத்தமான வெளிப்படுத்தல் ஒப்பிடற்றகவின்மையை ஈடுசெய் யலாம்.

**3.4 பயனுடைய நிதி அறிக்கையிடல்மீதான கிரய வரையறை**

3.4.1 கிரயம் தாக்கவிலுள்ள வரையறையாகும். நிதி அறிக்கையிடல் தரும் தகவலின்மீது எங்கும் வியாபித்திருக்கும். நிதித் தகவலின் அறிக்கையிடுதல் கிரயங்களை உண்டுபண்ணும். ஆகவே, அந்தக் கிரயங்கள் அறிக்கையிடுதலினால் கிடைக்கும் பயன்களால் நியாயப்படுத்துவது முக்கியமாகும். கவ னத்தில் கொள்ளவேண்டிய கிரயங்களும் பயன்களும் பலவகையாகும்.

3.4.2 நிதித்தகவல்களை தருபவர்கள் தங்கள் முயற்சிகளை பெரும்பாலும் தகவல்களை சேகரிப்பதிலும், செயன்முறைபடுத்துவதிலும், அறுதியீட்டு செய்தலிலும் மற்றும் விநியோகிப்பதிலும் செலவிடுவர். ஆனால், இறுதியாக உபயோகிப்பவர்களே குறைந்த மட்ட பயனை பெறுவதன்மூலம் அந்த கிரயங்களை தாங்கிக்கொள்வர். நிதித்தகவல்களை உபயோகிப்போர்களும் தரப்பட்ட தகவல்களை பகுப் பாய்வு செய்து விளக்குவதற்கான கிரயங்களை தாங்கிக்கொள்வர். தேவையான தகவல் தரப்படாத விடத்து, உபயோகிப்போர்கள் அந்த தகவலை வேறு எங்கிருந்தும் பெறுவதற்கு அல்லது மதிப்பிடுவதற்கு மேலதிக கிரயங்களை தாங்கிக்கொள்வர்.

3.4.3 தொடர்புடையதும் நேர்மையாக நிதித்தகவலை அறிக்கையிடுதலும் உபயோகிப்போர்கள் அதிக நம் பிக்கையுடன் தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவும், இதன் விளைவாக மூலதனச் சந்தைகள் திறமை யுடன் தொழிற்படுவதுடன், முழு பொருளாதாரத்திற்கும் மூலதனக் கிரயம் குறைவாகவிருக்கும். ஒரு தனி முதலீட்டாளர் கடன்கொடுனர் அல்லது ஏனைய கடனாளரும் தகவல் அடிப்படையில் தீர் மானங்கள் எடுப்பதன்மூலம் பயன் அடைவார். எனினும், பொது நோக்கு நிதி அறிக்கைகள் ஒவ் வொரு பாவனையாளருக்கும் தொடர்புடைய எல்லா தகவல்களையும் தருவது சாத்தியமாகாது.

3.4.4 கிரய வரையறையை பிரயோகிப்பதில், சபை குறிப்பிட்ட தகவலை அறிக்கையிடுவதினால் கிடைக் கும் பயன்கள் அந்த தகவலை தந்து உபயோகிப்பதற்கு ஏற்படும் கிரயங்களை நியாயப்படுத்துவதை மதிப்பீடு செய்யும் ஒரு பிரேரிக்கப்பட்ட அறிக்கையிடல் நியமத்தை அபிவிருத்திசெய்வதில் கிரய வரையறையை பிரயோகிக்கும் போது, சபையானது நிதித்தகவல் தருநர்கள், உபயோகிப் போர்கள், கணக்காய்வாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஏனையோர்களிடமிருந்து பயனின் எதிர் பார்க்கப்படும் நியமத்தின் தன்மை மற்றும் அளவு மற்றும் நியமத்தின் கிரயங்கள் பற்றிய தகவலை சேகரிக்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தகவலின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப் படையிலேயே மதிப்பீடுகள் அமையும்.

*3.4.5* இயல்பாக இணைந்த அகவயத் தன்மை நிமித்தம், குறிப்பிட்ட நிதித்தகவல் உருப்படிகளின் தகவலை அறிக்கையிடுவதின் கிரயம் மற்றும் அவற்றால் கிடைக்கும் பயன்கள் பற்றிய மதிப்பீடு நபரிற்கு நபர் வேறுபட்டிருக்கும். எனவே, சபை கிரயங்களையும் பயன்களையும் அறிக்கையிடும் தனி நிறுவனங்களோடு தொடர்புபடாது. பொதுவாக நிதி அறிக்கையிடலுடன் தொடர்புபடுத்துவதையே கவனத்தில் கொள்ளும். இது, நிதி கிரயங்கள் மற்றும் பயன்களின் மதிப்பீடுகள் எல்லா நிறுவனங் களின் ஒரே அறிக்கையிடற் தேவைப்பாடுகளை நியாயப்படுத்துவதாக கருதக் கூடாது. நிறுவனங்களின் வேறுபட்ட அளவுகள், வேறுபட்ட வழிகளில் மூலதன தரப்படுத்தல் (பொதுவாகவோ அல் லது தனியாகவோ), உபயோகிப்போர்களின் வேறுபட்ட தேவைகள் மற்றும் ஏனைய காரணிகளின் நிமித்தம் வேறுபாடுகள் இருப்பது பொருத்தமானதே.

*3.5* **அடிப்படையான எடுகோள்**

**தொடர்ந்து இயங்கும் உரிமம்**

*3.5.1* ஒரு உரிமம் ஒரு தொடர்ந்து இயங்கும் உரிமமாக எதிர்வுகூறக்கூடிய எதிர்காலம் வரையில் தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையிலேயே வழக்கமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும். எனவேதான் எடுகோளிற்கமைய உரிமத்திற்கு கலைக்க வேண்டிய அல்லது பொருண்மையான அளவிற்கு தொழிற்பாடுகளை குறைக்க வேண்டிய எண்ணமோ தேவையோ இல்லை என்று கரு தப்படுகின்றது; இப்படியான எண்ணமோ தேவையோ இருக்கும்பட்சத்து நிதிக்கூற்றுக்களை வேறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அந்த அடிப்படையை வெளிப்படுத்த வேண்டும்.

************

*4.* **NPO சார்ந்த குறிப்பிட்ட சரத்துக்கள்**

கீழ்க்காணப்படும் குறிப்பிட்ட சரத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டியதுடன், குறிப்பிட்ட சரத்துக்களின் நோக்கமானது NPO சம்பந்தப்பட்ட விடயங்களையும் செம்மையாக் கல்களையும் தெரிவிப்பதாகும் இந்தப்பகுதியானது வெளிப்படுத்தல்கள் அடங்கலாக NPO களின் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிலும் முன்னிலைப்படுத்தலிலும் பின்பற்ற வேண்டிய கொள்கைகளை குறிப்பிடுகின்றது. NPO கள்; SL SoRP இற்கு இசைவாக இருப்பதற்கு அவற்றை முழுமையாக பின்பற்ற வேண்டும்.

சபை காலத்திற்குக்காலம் NPO துறையில் ஏற்படும் அபிவிருத்திகளை கையாள்வதற்காக மேலதிக குறிப் பிட்ட சரத்துக்களையும் வழிக்காட்டல்களையும் வெளியிடும். அவைகளும் இந்த SL SoRP இன் ஒரு பகுதி யாக கருதப்பட வேண்டும்.

*4.1* **நிதிக்கூற்றுக்களின் மூலகங்கள்**
**நிதிக்கூற்றுக்களின் கூறுகள்**

ஒரு NPO இன் நிதிக்கூற்றுக்களின் ஒரு பூரண தொகுதி கீழ்க்காண்பவைகளை உள்ளடக்கும்:

(a) முற்றடக்க வருமானக்கூற்று;
(b) நிதி நிலைமைக்கூற்று;
(c) ஒதுக்கங்களில் மாற்றங்களுக்கான கூற்று;
(d) காசுப்பாய்வுக் கூற்று; மற்றும்
(e) கணக்கீட்டு கொள்கைகளும் விளக்கக் குறிப்புக்களும்.

நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புக்களின் பகுதியாக NPO க்கள் நிதிக்கூற்றுக்களோடு சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறைநிரப்பு அட்டவணைகளையும் தகவல்களையும் உள்ளடக்கக்கூடும். எனினும், நிதிக்கூற்றுக்கள் கூட்டிணைப்பு உரிமமொன்றில் உள்ளடக்கப்படும் ஆட்சி சபையின் அறிக்கைகள், தவிசாளரின் கூற்றுக்கள், முகாமையின் பகுப்பாய்வுகள் மற்றும் ஒரு குழும நிதி அல்லது வரு டாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுபவை போன்ற உருப்படிகள் ஆகியவற்றை வழக்கமாக உள்ள டக்க மாட்டாது. (உரிய நன்கொடை வழங்குனர் ஒப்பந்தங்களினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தாலொழிய.)

*4.2* **திரண்ட நிதியம்**

**மட்டுப்படுத்தப்படாத நிதியம் (மூலதனம்)**

மட்டுப்படுத்தப்படாத நிதியம் NPO களின் மூலதனத்திற்கு சமத்துவாய் இருப்பதுடன், நிதிக்கூற்றுக் களில் மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களிலிருந்து, வேறாக முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். எனினும், பூர்த்தியடைந்த செயற்றிட்டங்களை பொறுத்தமட்டில், மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களில் எஞ்சியுள்ள மிகைகள் உரிய ஒப்பந்தம் அல்லது நிதியங்களில் திட்டங்கள் பூர்த்தியான பிறகு, நிதியங்களில் நிகர நிதிகள் இருந்து, உடன்படிக்கை அனுமதிக்கும்பட்சத்தில், மட்டுப்படுத்தப்படாத நிதியத்தில் உட் படுத்துவதற்காக மாற்றப்படலாம்.

**மட்டுப்படுத்தப்பட்ட நிதியம்**

“செலவழிக்கப்படாத மானியம்” எனவும் அழைக்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள் NPO களின் மட்டுப்படுத்தப்பட்ட நிகரச் சொத்துக்களின் ஒரு பகுதியாகும்.

**அளவீடும் ஏற்பிசைவும்**

*மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் அவைகள் பெறப்படும்போதே நிதிக்கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். அதாவது காசாக பெறப்பட்டபோது அல்லது வங்கி கணக்கில் வைப்பு செய்யப்பட்டபோது அல்லது அவைகள் பெறப்படும் என்ற நியாயமான உறுதிப்பாடு இருக்கும்போது.*

**வெளிப்படுத்தல்**

*கீழ்க்காண்பவைகளை வெளிப்படுத்த வேண்டும்:*

(a) *நிதிக்கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தும் முறை உள்ளடங்கலாக மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள் மற் றும் மட்டுப்படுத்தப்படாத நிதியங்கள் கணக்கீட்டுக் கொள்கைகள்;*

(b) *நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பங்களிப்புக்களின் தன்மை மற்றும் அளவு மற்றும் நிறுவனம் நேராகப் பயன் பெற்றிருக்கும் வேறு வகைகளான உதவிகள் பற்றிய குறிப்பு;*

(c) *ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள உதவிக்கான பூர்த்திசெய்யப்படாத நிலைமைகளும் உறுமுரிமை நிகழ்வுகளும்.*

*4.3* **வருமானம்/மானியங்களின் ஏற்பிசைவு**

*4.3.1* NPO *கள்*

(a) *மட்டுப்படுத்தப்பட்ட வருமானம்; மற்றும்*

(b) *மட்டுப்படுத்தப்படாத வருமானம்*

*ஆகியவற்றை வேறுபடுத்துவதுடன் அவை ஒவ்வொன்றும் பெறப்பட்ட அல்லது பெறக்கூடிய பதிலிறுக்கியின் சீர்மதிப்பில் அளவிடப்பட வேண்டும்.*

*4.3.2* (a) *மட்டுப்படுத்தப்பட்ட மற்றும்* (b) *மட்டுப்படுத்தப்படாத வருமானம் ஆகியவற்றை ஏற்பிசைவு செய்வதற்கு வேறுபட்ட அணுகுமுறைகள் உபயோகிக்கப்படும்.*

**மட்டுப்படுத்தப்பட்ட வருமானம்**

*4.3.3* *மட்டுப்படுத்தப்பட்ட பங்களிப்புக்கள் இலவசமாக (விலையின்றி) வந்தவைகளல்ல. அவை ஒரு சாத னையை, சேவையை அல்லது வேறு செய்முறையை நிறைவேற் றக்கூடிய நிபந்தனைகளுடன் இணைந்த உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் அல்லது வேறு புரிந்துணர்வுகளின் அடிப்படையிலேயே பெறப்பட்டவையாகும்.* NPO *கள் உடன்பட்ட நிபந்தனைகளுடன் இணங்குவதன்மூலம் அல்லது கடப்பாடுகளை பூர்த்தி செய்வதன்மூலமாகவே பங்களிப்புக்களை பெறுகின்றன. எனவே, பங்களிப்புக்கள் பெறப்படுவதற்கான நியாயமான உறுதிப்பாடு இருப்பதுடன் பெறுவதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கும்பட்சத்து மாத்திரமே அவற்றை முற்றடக்க வருமானக்கூற்றில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.*

*4.3.4* *மேற்கூறப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பங்களிப்புகளுக்கு அமைவாக முற்றடக்க வருமானக்கூற்றில் ஏற் பிசைவு செய்யப்படும் மட்டுப்படுத்தப்பட்ட பங்களிப்புக்கள் ஒரு சீரான முறையில் செலவழிக்கப் பட்டுள்ள உத்தேச தொடர்புடைய கிரயங்களுடன் பொறுத்தும் பார்க்கப்படல் வேண்டும். விளைவுத் திறனுடன் பார்க்கும்போது அவ்வாறான பங்களிப்புக்கள்* NPO *தொடர்புடைய சேவையை வழங்கி இருக்கும் அல்லது நிறைவேற்றியிருக்கும் அளவிற்கு ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.*

*4.3.5* *எந்தவொரு மட்டுப்படுத்தப்பட்ட பங்களிப்பும் பெறப்படும்போது, (உதாரணமாக, ஒரு வங்கி வைப்பு) பங்களிப்பு நிதி நிலைமைக்கூற்றில் மட்டுப்படுத்தப்பட்ட நிதியத்தில் செலவுப்பதிவு செய்யப்பட்டு வங்கி கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட வேண்டும். அதன்பின், ஒரு சீரான முறையில் (உதாரண மாக, ஒவ்வொரு மாதமுடிவில்) உடன்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட செயல்களுக்கு மாதத்தில் செலவு செய்யப்பட்ட தொகைக்கு சமமான தொகையை வருமானத்திற்கு கொண்டுசெல்லல் வேண் டும். இது நிதிநிலைக்கூற்றிலுள்ள தேவை மட்டுப்படுத்தப்பட்ட நிதிக் கணக்கில் வரவுப்பதிவு செய் யப்பட்டு வருமானக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்படுவதன்மூலம் மேற்கொள்ளப்படும்.*

*4.3.6* *இந்த விதிமுறையை பின்பற்றுவதன்மூலம் முற்றடக்க வருமானக்கூற்றில் வரும் மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்தினதும் மற்றும் தொடர்புடைய குறிப்பிட்ட திட்டச் செலவுகளினதும் நிகர பெறுபேறு பூஜ்ஜியமாகும் ("0"). எனவே, பூஜ்ஜியத்திற்கு அதிகமாக அல்லது குறைவாக இருக்கும் தொகை வேறு தலைப்புக்களின்கீழ் வரும் உருப்படிகளின் விளைவாகும், உதாரணமாக, திட்டச்*

செயற்பாட்டோடு இணைக்கப்படாத மட்டுப்படுத்தப்படாத வருமானம் அல்லது செலவுகள் அல்லது, மட்டுப்ப டுத்தப்படாத நிதியத்திற்கு மாற்றுவதற்கு, கொடையாளி அனுமதி கொடுத்திருக்கும் மட்டுப்படுத்தப் பட்ட நிதியமொன்றில் எஞ்சியுள்ள மிகை, ஏதுமிருப்பின்.

**மட்டுப்படுத்தப்படாத வருமானம்**

4.3.7 பொதுவான மட்டுப்படுத்தப்படாத வளங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் வணிக நிறுவனங்களின் வருமான குணாம்சங்களுடன் ஒத்திருப்பதுடன், அவை அவ்வாறே கையாளப்பட வேண்டும். அது, தொகையை நம்பகமாக அளவிடக்கூடியபட்சத்து, அல்லது நடவடிக்கையிலிருந்து பொருளாதார பயன்கள் NPO இற்கு பாய்வு சாத்தியப்படும்பட்சத்து மாத்திரமே ஏற்பிசைவு செய்யப்படல் வேண்டும். அதாவது, பெறக்கூடிய பதிலிறுக்கித் தொகைபற்றி கணிசமான நிச்சயமற்றத்தன்மை இல் லாமை - உதாரணமாக, அங்கத்துவ கட்டணங்கள், சில்லறை கொடைகள், ஆலோசனை கட்ட ணங்கள் பண்ட விற்பனை அல்லது ஏனைய மூலகங்களிலிருந்து வரும் மட்டுப்படுத்தப்படாத வரு மானம்.

4.3.8 முற்றடக்க வருமானக்கூற்று ஒரு வணிக நிறுவனத்து இலாபநட்டக் கணக்கில் காணப்படுவது போன்று NPO இற்கு கிடைக்கும் ஆதாயங்களையும் ஏற்படும் நட்டங்களையும் உள்ளடக்கக்கூடிய தாய் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**4.4 தொக்கு**

பயனாளிகளின் நன்மைக்காக வாங்கப்பெற்ற அல்லது கொடையாகப்பெற்ற தொக்கு.

4.4.1. NPO க்கள் பயனாளிகளிற்கு கிரயமில்லாது அல்லது பெயரளவிலான தொகையிற்கு விநியோகம் செய்வதற்கு பண்டங்களை உற்பத்தி செய்யலாம் அல்லது வாங்கலாம். அப்படியான பண்டங்கள் விற்பனைக்கோ, உற்பத்தியில் நுகர்வதற்கோ அல்லது சேவை வழங்கலிற்கு பாவிப்பதற்கோ அல்லது வணிக உற்பத்தி அல்லது வியாபாரத்தன்மையுடைய நோக்கத்திற்கு பாவிக்கப்படாதில்லாதிருந் தாலும், இந்த SL SoRP இன் நோக்கத்திற்காக இந்த உருப்படிகள் தொக்காகவே கருதப்படல் வேண்டும்.

4.4.2 சிலவேளையில் ஒரு NGO பண்டங்களை பயனாளிக்கு விநியோகம் செய்வதற்கு அல்லது பண் டங்களை விற்று வரும் பணத்தை பயனாளிகளின் பயன்களிற்கு உபயோகிப்பதற்கு அவ்வாறான பண்டங்களை ஒரு கொடையாக பெறும். அப்படியான சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட பண்டங்களை மதிப்பீடு செய்ய முடியாது போகலாம். எனவே, நிதி நிலைமைக்கூற்றின் திகதியில் கொடையாக வந்த பண்டங்கள் இருக்குமாயின், அவை கணியப்படுத்தப்பட்டு நிரல்படுத்தப்படல் வேண்டும்.

**4.5 வருமான வரி**

**திரண்ட நிதியத்திற்கு நேரடியாக செலவு அல்லது வரவுப் பதிவு செய்யப்படும் உருப்படிகள்**

4.5.1 நடப்பு ஆண்டு வரி நேரடியாக திரண்ட நிதியத்திற்கு வரவு அல்லது செலவுப் பதிவு வைக்கப்பட்ட உருப்படிகளோடு சம்பந்தப்பட்டிருந்தால், நடப்பு வரி அதே காலத்தில் அல்லது பிறிதொரு காலத் தில் சம்பந்தப்பட்ட நிதியத்தில் பற்று அல்லது வரவு வைக்கப்படல் வேண்டும்.

4.5.2 வரிச்செலவு (வருமானம்) முற்றடக்க வருமானக்கூற்றில் முகப்பில் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

**4.6 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

**காணி**

4.6.1 ஒரு NPO கீழ்க்காணப்படுபவை போன்ற ஏதாவதொரு வழியில் காணியை பெறலாம்:

(a) அரசாங்கம் அனுமதித்த கட்டாய சுவீகரிப்பு திட்டம் உட்பட்ட, காணி உடைமைகளிலிருந்து வாங்குதல்;

(b) பாவிப்பு நிபந்தனைகளினுடன் அல்லது நிபந்தனைகளில்லாது NPO க்களிற்கு நிறுவனங்களினால் அல்லது தனி நபர்களினால் நன்கொடையாக கொடுக்கப்பட்ட காணி;

(c) பாவிப்பு நிபந்தனைகளுடனோ அல்லது நிபந்தனைகளில்லாது அரசினால் இலவசமாக NPO களிற்கு வழங்கப்பட்ட காணி;

(d) ஒரு NPO சொத்துரிமை அற்ற அறங்காவலராக செயல்படும்பட்சத்து NPO களிற்கு ஒப்படைக்கப்படும் காணி.

*4.6.2* மேற்கண்ட வழிகளில் பெறப்பட்ட காணிக்கான கணக்கீட்டு முறை கீழ்க்கண்டவாறு அமையும்:

(a) **கொள்வனவுமூலம் வாங்கப்பட்ட காணி**

* இவ்வாறான காணி பதிவுக்கட்டணம் போன்ற தொடர்புடைய கிரயங்கள் உட்பட, வாங்குவதற்கு கொடுக்கப்பட்ட/கொடுக்கப்படவிருக்கும் விலையின் கூட்டுதொகையில் பதியப்படல் வேண்டும்.

* ஒரு கட்டாய சுவீகரிப்புத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட காணியை பொறுத்தமட்டில், NPO விற்கும் காணியின் முன்னைய உடைமையாளருக்குமிடையே இழப்பீடு சம்பந்தமாக பிணக்கு நிகழும்பட்சத்து, நிதிக்கூற்றுக்களின் காணியின் கிரயத்தை தீர்மானிக்கும் தேவைக்காக கீழ்க்காணும் நிபந்தனைகளிற்குட்பட்டு மேலதிக நட்டஈட்டிற்காக ஒரு படித் தொகையும் உள்ளடக்கப்படல் வேண்டும்:

(i) மேலதிக ஈட்டுத்தொகை கொடுப்பனவு சாத்தியமாகும்பட்சத்து; அத்துடன்
(ii) அவ்வாறு கொடுக்கவேண்டிய தொகையை நியாயமாக மதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்கும்பட்சத்து.

(b) **கிரயமற்று (இலவசமாக) பெறப்பட்ட காணி**

* சிலவேளைகளில் அரசாங்கம் கிரயமில்லாது இலவசமாக காணியை NPO விற்கு கொடுக்கும். தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள் ஒரு அறக்கட்டளை மூலம் பாட சாலைகள் நிருமாணித்தல், பூங்காக்கள் நிருமாணித்தல் அல்லது அவற்றை ஒத்த வசதிகளை அமைத்தல் போன்ற குறிப்பிட்ட நோக்கங்களிற்காக காணியை கொடுக்கலாம். NPO களிற்கு அவ்வாறான காணியின் கிரயம் பூஜ்ஜியமாகும் (0). அடக்கத் தில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட காணி பணத்தொடர்பற்ற மானிய மாகும். அதன்படி மானியமும் சொத்தும் சீர்மதிப்பில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். சிலவேளைகளில், மாறாக சிலவேளைகளில் மானியத்தையும் சொத்தையும் பெயரளவு தொகையிலும் பதிவுசெய்யலாம். எனினும், தக்க கட்டுப்பாட்டை பேணுவதற்காக அவ் வாறான காணி நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, உபயோக நிபந்தனைகள் உட்பட விபரங்களை நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தல் வேண்டும்.

* பதிவுக்கட்டணம் போன்ற தொடர்புடைய கிரயங்கள் மேற்கண்டவற்றிற்கு கூட்டப்படும்.

(c) **அரசாங்கத்தால் உரிமைப்படுத்தப்பட்ட காணி**

* அவ்வாறான காணிக்கு NPO விற்கு உரித்துடைமையில்லை என்பதுடன் அதிலிருந்து வரும் பொருளாதார பயன்கள் NPO விற்கு கிடையாது. உரிமை அரசாங்கத்திடமே உள்ளது. NPO அறங்காவலராக தொழில்படுகின்றது. எனவே, அவ்வாறான காணி NPO வின் ஒரு சொத்தாகக் கருதப்பட மாட்டாது.

**அட்டுறு அடிப்படை கணக்கீட்டிற்கு மாறும்பொழுது ஆரம்ப மிகுதியின் நிலைமை**

*4.6.3* எல்லா ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களையும் பதிவு செய்யாதிருக்கும் ஒரு நிறு வனம் இந்த SL SoRP இற்கமைய NPO க்கள் அட்டுறு அடிப்படை கணக்கீட்டு முறைக்கு மாறும் பொழுது அவ்வாறான உருப்படிகளை கணக்கீடு செய்வதில் ஒரு பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கக்கூடும். உதாரணமாக, நன்கொடையாக அல்லது அறக்கட்டளைகள்மூலம் பெறப் பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அவை பெறப்பட்டபோது பதிவு செய்யப் படாமல் இருக்கக்கூடும். அத்துடன், திட்டச் செலவின் ஒரு பகுதியாக மட்டுப்படுத்தப்பட்ட நிதியத் தின்மூலம் பெறப்பட்ட உருப்படிகள் முற்றடக்க வருமானக்கூற்றில் பதிவழிப்பு செய்யப்பட்டிருக்க லாம். அவ்வாறான சொத்துக்களை இனங்கண்டு தக்கவாறு கணக்கீடு செய்வது அவசியமாகும். அவ்வாறான சொத்துக்களிற்கு கணக்கீடு செய்யும்போது பாதகமாக வைத்திருத்தல், உரிமைக் குறைபாடுகள் போன்ற காரணங்களை கவனத்தில் கொள்ளல் தேவைப்படலாம்.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் - கொடைகளாகவோ அல்லது அறக்கட்டளைகளாகவோ அல்லது மானியமூலமாகவோ பெறப்பட்டவை**

4.6.4 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொடைகளாகவோ அறக்கட்டளைகளாகவோ பெறப்படும்போது, அவை சீர்மதிப்புத் தொகையில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டு ஒரு பிற்போடப்பட்ட வருமானக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்படல் வேண்டும். பின்னர், அப்படியான உருப்படிகள் தேய்மானம் செய்யப்பட்டு, தொடர்புடைய தொகையை பிற்போடப்பட்ட வருமானத்திலிருந்து நிதிநிலைமைக்கூற்றில் முற்றடக்க வரு மானக்கூற்றிற்கு மாற்றலாம். நிதி நிலைமைக்கூற்றில் பிற்போடப்பட்ட வருமானச் சொத்துக்களின் நிகர புத்தக பெறுமதியிலிருந்து கழிக்கப்பட வேண்டும். எனவே, சொத்தின் கொண்டுசெல்லப்படும் தொகை பூஜ்ஜியமாகும்.

4.6.5 NPO வினால் மானிய நிதிக்குள்ளான ஒரு செயற்றிட்டத்தில் உபயோகிப்பதற்காக ஏதேனும் உருப் படி வாங்கப்படும்போது, அது செயற்றிட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளபொழுது, அப்படி யான உருப்படிகள், நிதிநிலைக்கூற்றில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின்கீழ் உட்படுத்தப்பட்ட எந்தவொரு உருப்படி தொடர்பாகவும் அதே வகைப்படுத்தலின்கீழ் நிதிக்கூற்றுக் களுக்கான குறிப்பாக வெளிப்படுத்தப்படும்.

4.6.6 செயற்றிட்டச் சொத்துக்கள் பந்தி 4.6.4 இற்கமைய வைக்கப்பட்டிருந்து வெளிப்படுத்தப்படும்போது, செயற்றிட்ட முடிவில் நிறுவனம் வைத்திருக்க வேண்டிய அப்படியான சொத்துக்கள் புத்தகத்தில் வேதன ஒதுக்கக்கணக்கு சீர்மதிப்பில் பதிவு செய்யப்படலாம். அவ்வாறான சொத்துக்களின்மீதான தேய்மானத் தொகை மூலதன ஒதுக்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படும். அவ்வாறான சொத் துக்கள் செயற்றிட்ட முதலில் சம்பந்தப்பட்ட பயனாளிகளிற்கு கொடுக்கப்படும் அல்லது திட்டமுடி வில் கொடையாளியிற்கு திருப்பிக்கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிதிக்கூற்றுக்களில் அவை தக்கவாறு வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

5. **அமுலிற்கு வரும் திகதி**

5.1 இலாப நோக்கமற்ற நிறுவனங்களிற்காக (அரசசார்பற்ற அமைப்புக்கள் உள்ளடங்கலாக) பரிந்துரைக் கப்பட்ட இலங்கை செயல்முறைக்கூற்று, 01 சனவரி, 2012 ஆந் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் காலங்களிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு பிரயோகமாகும். இந்த SL SoRP 01 சனவரி, 2012 ஆந் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் காலங்களிற்கான நிதிக்கூற்றுக் களிற்கு பிரயோகிக்க பரிந்துரைக்கப்படுவதுடன் ஊக்கப்படுத்தப்படுகின்றது. 01 சனவரி, 2013 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலங்களிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு இந்த SL SoRP யை பிரயோகிப்பது கட்டாயமாகும்.

5.2 இந்த SL SoRP, CA இலங்கையினால் 2005 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு 01 ஏப்பிறல், 2006 இல் நடைமுறைக்கு வந்த NPO களிற்கான SL SoRPs இற்கு பிரதியீடாகும். (மேலீடாகும்).

**பின்னிணைப்பு:**

**நிதிக்கூற்றுக்களின் விளக்கக் கட்டமைப்பு**

இந்த பின்னிணைப்பு விளக்கத்திற்கு மாத்திரமே, அன்றி அது SL SoRP இன் ஒரு பகுதியாகாது. SL SoRP இன் நோக்கமானது அதன் கொள்கைகளின் பிரயோகத்தில் அவற்றின் கருத்தை தெளிவாக விளக்குவதாகும். விளக்க நிதிக்கூற்றுக்கள் முழு SLFRs களின் அடிப்படையில் அமைந்தனவாகும்.

SL SoRP நிதிக்கூற்றுக்களின் கூறுகளை காட்டுவதுடன் நிதிநிலைமை கூற்று, முற்றடக்க வருமானக்கூற்று, ஒதுக்கங்களில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்வுக்கூற்று ஆகியவற்றின் முகப்பில் வெளிப் படுத்த வேண்டிய குறைந்தபட்ச தேவைப்பாடுகளை தருகின்றது. நிதிக்கூற்றுக்கள் கணக்கீட்டுக் கொள்கை களையும் குறிப்புக்களையும் உள்ளடக்கும். பின்னிணைப்பின் நோக்கமாவது, நிதிநிலைமைக்கூற்று, முன்னடக்க வருமானக்கூற்று, ஒதுக்கங்களில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப்பாய்வுக் கூற்று ஆகிய வற்றை முதன்மை நிதிக்கூற்றுக்களில் எவ்வாறு சமர்ப்பிப்பது என்பதற்கான உதாரணங்களை தருவதாகும். ஒவ்வொரு அமைப்பின் சூழ்நிலைகளிலும் நேர்மையான முன்னிலைப்படுத்தலை அடையும் பொருட்டு முன்னிலைப்படுத்தும் ஒழுங்கும் வரிசை உருப்படிளுக்கு உபயோகப்படுத்திய வர்ணிப்புக்களும் அவசியமானவிடத்து மாற்றப்படல் வேண்டும்.

**ABC SRI LANKA**

***31 மார்ச், 2013 ஆந் திகதியன்றுள்ளவாறு***
***நிதிநிலைமைக் கூற்று***

| (ஆயிரம் ரூபாக்களில்) | குறிப்புக்கள் | நிறுவனம் 2013 | 2012 |
|---|---|---|---|
| மார்ச் 31ஆந் திகதியன்றுள்ளவாறு | | 2013 | 2012 |
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | |
| ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 4.1 | XXXX | XXXX |
| அருவச் சொத்துக்கள் | 4.2 | XXXX | XXXX |
| நீண்டகால வருமதிகள் | 4.3 | XXXX | XXXX |
| ஏனைய நிதிச்சொத்துக்கள் | 4.4 | XXXX | XXXX |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | XXXX | XXXX |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தொக்குகள் | 4.5 | XXXX | XXXX |
| வருமதிக் கணக்குகள் | 4.6 | XXXX | XXXX |
| முற்கொடுப்பனவுகள் | 4.7 | XXXX | XXXX |
| ஏனைய நிதிச்சொத்துக்கள் | 4.8 | XXXX | XXXX |
| காசும் காசுச்சமமானவைகளும் | 4.9 | XXXX | XXXX |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | XXXX | XXXX |
| **மொத்த சொத்துக்கள்** | | XXXX | XXXX |
| **பரிப்புக்களும் ஒதுக்கங்களும்** | | | |
| **திரண்ட ஒதுக்கங்கள்** | | | |
| மட்டுப்படுத்தப்படாத நிதியங்கள் | 4.10 | XXXX | XXXX |
| நோக்கம் நிர்ணயிக்கப்பட்ட நிதியங்கள் | 4.11 | XXXX | XXXX |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள் | 4.12 | XXXX | XXXX |
| அறக்கொடை நிதியம் | 4.13 | XXXX | XXXX |
| ஏனைய மூலதன ஒதுக்கங்கள் | 4.14 | XXXX | XXXX |
| **மொத்த திரண்ட ஒதுக்கங்கள்** | | XXXX | XXXX |
| **நடைமுறையற்ற பரிப்புக்கள்** | | | |
| கடன்களும் குறுங்கால கடன்களும் | 4.15 | XXXX | XXXX |
| ஊழியர் பயன் பரிப்புக்கள் | 4.16 | XXXX | XXXX |
| பிற்போடப்பட்ட வருமானம் | 4.17 | XXXX | XXXX |
| **மொத்த நடைமுறையற்ற பரிப்புக்கள்** | | XXXX | XXXX |
| **நடைமுறை பரிப்புக்கள்** | | | |
| சென்மதி கணக்குகள் | 4.18 | XXXX | XXXX |
| அட்டுறு செலவுகள் | 4.19 | XXXX | XXXX |
| கடன்களும் குறுங்கால கடன்களும் | 4.15 | XXXX | XXXX |
| ஏற்பாடுகள் | 4.20 | XXXX | XXXX |
| வங்கி மேலதிகப் பற்றுக்கள் | 4.21 | XXXX | XXXX |
| **மொத்த நடைமுறை பரிப்புக்கள்** | | XXXX | XXXX |
| **மொத்த பரிப்புக்கள்** | | XXXX | XXXX |
| **மொத்த பரிப்புக்களும் ஒதுக்கங்களும்** | | XXXX | XXXX |

இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கான பொறுப்பு பணிப்பாளர்கள் சபையை/அறங்காவலர்களை சார்ந்தது. இந்த நிதிக்கூற்றுக்களின் வெளியீட்டிற்கு பணிப்பாளர்கள் சபை/அறங்காவலர்களினால் XX XX 20XX ஆந் திகதி யன்று அனுமதி வழங்கியது. இந்நிதிக்கூற்றுக்கள் ✓2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தின் தேவைப்பாடுகளிற்கமைய தயாரிக்கப்பட்டுள்ளனவென சான்றளிக்கின்றேன்.

பணிப்பாளர்கள் சபை சார்பாக கையொப்பமிடப்பட்டது,

திகதி: XX XX 20XX ..................... ...................... ................................

பணிப்பாளர். பணிப்பாளர். நிதித் தலைவர்.

............ ஆந் பக்கத்திலிருந்து ........ பக்கம்வரை காணப்படும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒன்றித்த பகுதியாகும்.

√ உரியதாயிருந்தால் மட்டுமே.

**ABC SRI LANKA**

*31 மார்ச், 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான*
*முற்றடக்க வருமானக் கூற்று*

(ஆயிரம் ரூபாக்களில்)

| **மார்ச் 31 ஆந் திகதியன்றுடன் முடிவடைந்த** ஆண்டு | குறிப்புக்கள் | நிறுவனம் 2013 | 2012 |
|---|---|---|---|
| தொழிற்பாட்டு வருமானம் | | | |
| உள்வரும் வளங்கள் | 4.22 | XXXX | XXXX |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | XXXX | XXXX |
| தொழிற்பாட்டு செலவு | | | |
| ஊழியர் தொடர்பான கிரயங்கள் | 4.23 | XXXX | XXXX |
| செற்றிட்டம்/செயற்பாடு நேர் கிரயங்கள் | 4.24 | XXXX | XXXX |
| வாடகைகள் | 4.25 | XXXX | XXXX |
| பண்டங்கள் மற்றும் மூலப் பொருட்களின் கொள்வனவு | | XXXX | XXXX |
| தேய்மானம் | | XXXX | XXXX |
| பொதுச் செலவு | | XXXX | XXXX |
| **மொத்த தொழிற்பாட்டு செலவு** | | XXXX | XXXX |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளின் நிகர மிகை/(பற்றாக்குறை)** | | XXXX | XXXX |
| **ஏனைய வருமானம்** | | | |
| நிகர நிதி வருமானம் | 4.26 | XXXX | XXXX |
| ஏனைய வருமானம் | | XXXX | XXXX |
| **மொத்த ஏனைய வருமானம்** | | XXXX | XXXX |
| **ஏனையச் செலவு** | | | |
| அந்நிய நாணயமாற்று நட்டங்கள்(நிகர) | | XXXX | XXXX |
| ஏனைய செலவுகள் | | XXXX | XXXX |
| **மொத்த ஏனைய செலவு** | | XXXX | XXXX |
| **தொழிற்பாடற்ற செயற்பாடுகளின் நிகர மிகை/ (பற்றாக்குறை)** | | XXXX | XXXX |
| **வரிக்கு முன்னரான நிகர மிகை/(பற்றாக்குறை)** | | XXXX | XXXX |
| வருமான வரிச் செலவு | 4.27 | XXXX | XXXX |
| **வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை)** | | XXXX | XXXX |
| **ஏனைய முற்றடக்க வருமானம்** | | | |
| நிர்ணயிக்கப்பட்ட பயன்திட்டங்களின் ஆயுட் காலமுறை இலாபங்கள் | 4.11 | | XXXX |

| | குறிப்புக்கள் | நிறுவனம் 2013 | 2012 |
|---|---|---|---|
| அந்நிய தொழிற்பாடுகளின் நாணய மாற்றத்தினால் ஏற்பட்ட அந்நியச் செலாவணி வித்தியாசம் | | XXXX | XXXX |
| ஆதன மீள்மதிப்பீட்டு ஆதாயங்கள் | | XXXX | XXXX |
| காசுப்பாய்வு இடர்த் தடுப்புக்கள் | | XXXX | XXXX |
| விற்பனைக்கு வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களின் சீர்மதிப்பில் ஏற்பட்ட நிகர மாற்றங்கள் | | XXXX | XXXX |
| ஏனைய முற்றடக்க வருமானத்தின் கூறுகளுடன் தொடர் புடைய வருமான வரி | | (XXXX) | ( XXXX) |
| **வருடத்திற்கான ஏனைய முற்றடக்க வருமான மொத்தம்** | | XXXX | XXXX |
| **வருடத்திற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | | XXXX | XXXX |
| **வருடத்திற்கான மொத்த முற்றடக்க வருமானத்தின் பகிர்வு** | | | |
| ஒதுக்கங்களிற்கான பகிர்வு | | XXXX | XXXX |
| அறக் கட்டளைப் பகிர்வு | | XXXX | XXXX |

............. இலிருந்து ............. பக்கங்கள்வரை காணப்படும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற் றுக்களின் ஒன்றிணைந்த ஒரு பகுதியாகும்.

**ABC SRI LANKA**

*முற்றடக்க வருமானக் கூற்று*

*மார்ச் 31, 2013 ஆந் திகதியன்றுள்ளவாறு*

*(ஆயிரம் ரூபாக்களில்)*

| *விவரணம்* | *மட்டுப்படுத்தப் பட்ட ஒதுக் கங்கள்* | *மட்டுப்படுத்தப் படாத ஒதுக்கங் களட* | *அறக்கட்டளை நிதியங்கள்* | *மூலதன ஒதுக்கங் கள்* | *வருடத் திற்கான விளைவு* | *மொத்தம்* |
|---|---|---|---|---|---|---|
| ***1 ஏப்பிறல், 2011ஆந் திகதியன்றுள்ளவாறு மீதி*** | XXXX | XXXX | XXXX | XXXX | XXXX | XXXX |
| ஆண்டிற்கான நிகர மிகை/(பற்றாக்குறை) | | | | | XXXX | XXXX |
| ஏனைய முற்றடக்க வருமானம் | | | | | XXXX | XXXX |

| *விவரணம்* | *மட்டுப்படுத்தப் பட்ட ஒதுக் கங்கள்* | *மட்டுப்படுத்தப் படாத ஒதுக்கங் கள்* | *அறக்கட்டளை நிதியங்கள்* | *மூலதன ஒதுக்கங் கள்* | *வருடத் திற்கான விளைவு* | *மொத்தம்* |
|---|---|---|---|---|---|---|
| ஒதுக்கங்களிற்கு/ ஒதுக்கங்களிலிருந்து மாற்றப்பட முன்பான ஒதுக்கங்கள் | XXXX | XXXX | XXXX | XXXX | XXXX | XXXX |
| பெறுபேறுகளின் பகிர்வு | XXX | XXX | | | (XXX) | XXX |
| அறக்கட்டளை நிதியத்திற்கு பெறுபேறுகளின் பகிர்வு | | | | | (XXX) | XXX |
| கொடையாளர்களின் மட்டுப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நோக்கு பங்களிப்புகளில் அதிகரிப்பு/குறைவு (குறிப்பு 4.12) | (XXX) | | XXXX | | (XXXX)<br>XXX | XXX |
| *31 மார்ச், 2012 இல் மீதி* | | | | | | |

............ இலிருந்து ............ பக்கங்கள்வரை காணப்படும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற் றுக்களின் ஒன்றிணைந்த ஒரு பகுதியாகும்.

ABC SRI LANKA

*காசுப்பாய்வுகள் கூற்று*

*31 மார்ச், 2013 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான*

*(ஆயிரம் ரூபாக்களில்)*

| | நிறுவனம் 2013 | 2012 |
|---|---|---|
| **31 மார்ச் உடன் முடிவடைந்த ஆண்டு** | | |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்வுகள்** | | |
| **வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை)(வரிக்கு முன்பு)** | XXXX | XXXX |
| **நிகர காசுப்பாய்வுகளுடன் மிகையின் கணக்கிணக்கம் செய்வதற்கான செம்மையாக்கல்கள்:** | | |
| **காசு-சாராத உருப்படிகள்:** | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் தேய்மானமும் சேத இழப்பும் | XXXX | XXXX |
| அருவச் சொத்துக்களின் காலத் தேய்மானமும் சேத இழப்பும் | XXXX | XXXX |
| தொகுதிகளின் நட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் | XXXX | XXXX |
| வருமதிகள் குறிப்பிட்ட இடர்கள் மற்றும் ஏற்பாடுகளில் மாற்றங்கள் | XXXX | XXXX |
| வட்டியும் காப்பாவண வருமானமும் | (XXXX) | (XXXX) |
| காப்பாவணங்கள்மீதான நட்டங்கள் (ஆதாயங்கள்) | (XXXX) | (XXXX) |
| நிலையான சொத்துக்களின் விற்பனை ஆதாயங்கள் | (XXXX) | (XXXX) |
| **செயற்படு மூலதன செம்மையாக்கல்** | | |
| வருமதிக் கணக்குகள் | (XXXX) | (XXXX) |
| முற் கொடுப்பனவுகள் | XXXX | XXXX |
| தொக்குகள் | XXXX | XXXX |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | (XXXX) | (XXXX) |
| சென்மதிக் கணக்குகள் | XXXX | XXXX |
| அட்டூறு செலவுகளும் பிற்போடப்பட்ட வருமானமும் | XXXX | XXXX |
| ஏனைய நிதிசார் பரிப்புக்கள் | XXXX | XXXX |
| **31 மாச்சு உடன் முடிவடைந்த ஆண்டு** | | |
| **கழிக்குக:** | | |
| வருமான வரி கொடுப்பனவு | XXXX | XXXX |
| வட்டி கொடுப்பனவு | - | - |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து/உபயோகித்த நிகர காசுப் பாய்வு | XXXX | XXXX |
| **முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்வுகள்** | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண கொள்வனவு | (XXXX) | (XXXX) |
| அருவச் சொத்து கொள்வனவு | (XXXX) | (XXXX) |
| உபகரண விற்பனைமீதான பெறுவனவுகள் | XXXX | XXXX |
| காப்பாவண கொள்வனவு | (XXXX) | (XXXX) |
| பெறப்பட்ட வட்டி | XXXX | XXXX |
| காப்பாவணங்களிலிருந்து வருமானம், நிகர | XXXX | XXXX |
| நிகர முதலீட்டு செயற்பாடுகளில் காசுப்பாய்வு(இருந்த/ உபயோகிக்கப்பட்ட) | XXXX | XXXX |

| | | |
|---|---|---|
| ***நிதியளிப்பு செயற்பாடுகளிலிருந்து /(உபயோகித்த) காசுப்பாய்வுகள்*** | | |
| *அரச கடன்களில் கடன்படுகை* | XXXX | XXXX |
| *அரச கடன் மீள்கொடுப்பனவுகள்* | (XXXX) | (XXXX) |
| *நிதியளிப்புச் செயற்பாடுகளின் நிகர காசு/(இருந்து /உபயோகித்த)* | XXXX | XXXX |
| *நிகர காசு மற்றும் காசு சமமானவைகளின் அதிகரிப்பு/(வீழ்ச்சி)* | XXXX | XXXX |
| *1 ஏப்பிறலில் காசும் காசு சமமானவைகளும்* | XXXX | XXXX |
| *31 மார்ச் இல் காசும் காசு சமமானவைகளும்* | XXXX | **XXXX** |

*............. இலிருந்து ............. பக்கங்கள் வரை காணப்படும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற் றுக்களின் ஒன்றிணைந்த பகுதியாகும்.*

**ABC SRI LANKA**

***நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்***

***31 மார்ச்சு, 2013 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டு***

1. **பொது தகவல்கள்**

ABC Sri Lanka *வானது, இலாப நோக்கமற்ற நிறுவனங்களுக்காக (அரச சார்பற்ற அமைப்புக்கள் உட் பட) பரிந்துரை செய்யப்பட்ட இலங்க செயன்முறைக்கூற்று வரைவிலக்கணத்திற்கு அமைவான ஒரு அமைப்பாகும்.*

[*இது சமூகச் சேவைகள் திணைக்களத்துடன் பதிவுசெய்யப்பட்டுள்ளது/பதிவுசெய்யப்படவில்லை. அத் துடன், ........... ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்க சமூக சேவைகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளது.*]

[*அமைப்பு, ........... ஆம் ஆண்டின் ............ ஆம் இலக்க இலங்கை கம்பனிகள் சட்டத்தின்கீழ் உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டியைக்கப்பட்டுள்ளது. கம்பனி கலைக்கப்படும்பட்சத்து, உறுப்பினர்களின் பரிப்பு ஒரு நபரிற்கு ...........ரூபா இற்குக் மட்டுப்பட்டுள்ளது.*]

[*அமைப்பு இலங்கை அறக்கட்டளை சட்டத்தினகீழ் பதிவுசெய்யப்பட் டுள்ளது.*]*

*அமைப்பின் சபை உறுப்பினர்கள்/அறங்காவலர்களின் பெயர்கள் ..................... பக்கத் தில் தரப்பட்டுள்ளன.*

*இலங்கையில் அஙைந்துள்ள இந்த கம்பனி* UK ABC *கம்பனியின் உள்ளூர் பிரதிநிதியாக இலங்கையில் இயங்குகின்றது. அமைப்பின் பிரதான செயற்பாட்டு ....................................இல் நடைபெறுகின்றது.*

*நிதிக்கூற்றுக்களில் "அமைப்பு" என்பது* ABC Sri Lanka *வைக் குறிக்கும்.*

*உரிய தொடர்பாவன கட்டுறுப்புகளுக்கு அமைவாக, உரிய செயற்பாடுகளின் தேறுகையுடன் முடிவடையும் சில செயற்பாடுகளை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் அமைப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.*

*............. இலிருந்து ............. பக்கங்கள்வரை காணப்படும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற் றுக்களின் ஒன்றிணைந்த பகுதியாகும்.*

*பிற வழியில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, பெறுமதிகள் ஆயிரம் ரூபாக்களில் (ரூபா 1,000) முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன.*

2. ***தயாரிப்பு அடிப்படை***

*2.1* **ஒத்திசைவு கூற்று**

*நிதிநிலைமைக்கூற்று, முற்றடக்க வருமானக் கூற்று, ஒதுக்கங்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்வுகளின் கூற்று ஆகியவை 31 மார்ச், 2013 திகதியிலும் அந்த திகதியில் முடிவுற்ற ஆண் டிற்கானதுமான நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இலாப நோக்கற்ற அமைப்புக்களாக (அரச சார்பற்ற அமைப்புக்கள் உட்பட) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள செயன்முறைக் கூற்றின் தேவைப்பாடுகளுக்கு இசைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.*

*2.2* **அளவீட்டு அடிப்படை**

*நிதிக் காப்பாவணங்கள் மற்றும் உயித்தறி (*Derivatives*) நிதிக்கருவிகள் சீர்மதிப்பில் காட்டப்பட்டுள்ளமை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரய மரபின் அடிப்படையிலே தயாரிக்கப்பட்டுள்ளன.*

*2.3* **தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்**

*அமைப்பின் தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுகின்றன(சமர்ப்பிக்கப்படுகின்றன). வேறு வழியில் காட்டப்பட்டிருந்தாலொழிய, எல்லா நிதித்தகவல்களும் ரூபா ஆயிரங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.*

*2.4* **கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்களும் வெளிப்படுத்தல்களும்**

*பிறவழியில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி அல்லது 2012 இல் வெளியிடப்பட்ட* SL SoRP *இல் குறிப்பி டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள் தவிர்த்து, கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டில் உபயோகிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளிற்கு முரண்படாதவாறு பிரயோகிக்கப் பட்டுள்ளன.*

*2.5* **குறிப்பிடத்தக்க கணக்கீட்டுத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்**

*நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது, அறிக்கையிடு திகதியில் அறிக்கையிடப்படும் வருமான தொகைகள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் மற்றும் நிகழ்தகு சொத்துக்களினதும் பரிப்புக்களின் வெளிப்படுத்தல் ஆகியவற்றை பாதிக்கும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை முகாமை மேற்கொள்ள வேண்டுமென கோருகின்றது. எனினும், எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமின்மை காரணமாக வெளிவரும் தகவல்கள் எதிர்காலத்தில் பாதிக்கப்படும் சொத்து மற்றும் பரிப்புக்கள் முன்கொண்டுசெல்லப்படும் தொகைகளிற்கு செம்மையாக்கங்களை தேவைப்படுத்தும்.*

* *சரியானதை தெரிவுசெய்யவும்.*

சுய தீர்மானங்கள்:

ABC இலங்கையின் கணக்கீட்டு கொள்கைகள் பிரயோகிக்கும் செயன்முறையில் முகாமை யானது, மதிப்பீடுகள் தொடர்புபட்ட தீர்மானங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொகைகளை குறிப்பிட்ட அளவிற்கு பாதிக்கக்கூடிய கீழ்வரும் தீர்மானங்களை முகாமை எடுத்துள்ளது. [முகாமையின் தீர்மானங்களை குறிக்கவும்]

**மதிப்பீடுகளும் எடுகோள்களும்**

எதிர்கால மற்றும் முக்கிய மதிப்பீட்டு மூலங்களின் அறிக்கையிடு திகதியில் நிலவும் நிச்சய மின்மைபற்றிய இன்றியமையாத எடுகோள்கள் முன்கொண்டுசெல்லப்படும் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் தொகைகளிற்கு அடுத்த நிதி கணக்குகள் பொருண்மையான செம்மையாக்கத்தை தேவைப்படுத்தும் இடர் பற்றி கீழே விபரிக்கப்படுகின்றது.

[முகாமையின் எடுகோள்களையும் மதிப்பீடுகளையும் கூறவும்.]

### 3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் தொகுப்பு

#### 3.1 அந்நிய நாணய ஊடுசெயல்கள்

இலங்கை ரூபாவை தவிர்த்து ஏனைய நாணயங்களில் நடைபெற்ற ஊடுசெயல்கள், ஊடுசெயல் நடைபெற்ற திகதியில் நிலவிய வீதங்களில் இலங்கை நாணயத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. அறிக்கையிடு திகதியில் அந்நிய நாணயத்தில் கூறப்பட்ட காசு சொத்துக்களும் (பங்குரிமைகள் உட்பட) பரிப்புக்கள் அத்திகதியில் நிலவிய வீதங்களில் இலங்கை ரூபாக்களிற்கு மாற்றப்பட்டுள்ளன. வரலாற்று கிரயத்தில் கூறப்பட்டுள்ள காசுசாராத சொத்துக்களும் பரிப்புக்களும் ஊடுசெயல் நடைபெற்ற திகதியில் நிலவிய வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன. தேறிய மற் றும் தேறாத நாணய மாற்று வித்தியாசங்கள் முற்றடக்க வருமானக்கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

பிரதான நாணய மாற்று வீதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன:-

| நாணயம் | முடிவுத் திகதி வீதம் | | சராசரி வீதம் | |
|---|---|---|---|---|
| | 31.03.2013 | 31.03.2012 | 31.03.2013 | 31.03.2012 |
| | | | | |

#### 3.2 காசும் காசு சமமானவைகளும்

ABC Sri Lanka ஆனது, கையிருப்புக் காசு, வங்கியிலிருந்து வருமதி மற்றும் மூன்று மாதத்தில் அல்லது அதற்குக் குறைந்த காலத்தில் பருவ முதிர்வு அடையும் குறுங்கால வைப்புக்கள் ஆகி யவற்றை காசு மற்றும் காசு சமமானவைகளாக கருதுகின்றது. ABC Sri Lanka இன் காசு முகாமையின் ஒன்றித்த பாகமாக இருக்கும் கோரிக்கையின் பேரில் மீளச் செலுத்தவேண்டிய குறுங்கால வங்கிக் கடன்கள் காசுப் பாய்வுகள் கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசு சமமானவைகளுடன் ஒரு கூறாக உள்ளடக்கப்படும்.

#### 3.3 நிதி சாதனங்கள்(கருவிகள்)

ABC Sri Lanka நிதிச்சொத்துக்களை கீழ்க்காணும் வகையில் வகைப்படுத்துகின்றது: இலாப நட்டத்தினூடாக சீர்மதிப்பிலான நிதிச்சொத்துக்கள், பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள், கடன்கள் மற்றும் வருமதிகள் மற்றும் விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதிச்சொத்துக்கள்.

*இலாப நட்டத்தினூடான சீர்மதிப்பிலான நிதிச்சொத்துக்கள்*

இலாப நட்டத்தினூடான சீர்மதிப்பிலான நிதிச்சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப் படுத்துவதுடன் அதன் விளைவாக ஏற்படும் ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் முற்றடக்க வருமா னத்தில் நிதிக்கிரயங்களாக ஏற்பிசைவு செய்யப்படும்.

ABC ஸ்ரீ லங்காவின் காப்பாவணங்கள் முதலீடுகளின் தொகுதி அடிப்படையில் வெளியாக முகாமைப்படுத்தப்படுவதனால் காப்பாவணங்களிலிருந்தான சகல வருமானமும் நிகரத்தில் வெளிக்காட் டப்படும். ABC ஸ்ரீ லங்காவின் சார்பாக முதலீட்டுத் தொகுதி முகாமையாளர் முதலீட்டினை கொள்வனவு செய்ய அல்லது விற்பனை செய்ய தீர்மானிக்கும் வியாபாரத்திகதியில் காப்பாவ ணங்கள் ஏற்பிசைவு செய்யப்படும் அல்லது ஏற்பிசைவு விலக்கப்படும்.

நிரற்படுத்தப்பட்ட காப்பாணங்களின் சீர்மதிப்பு அறிக்கையிடும் திகதியில் அவற்றின் குறிப்பிட்ட ஏல விலையாகும். நிதிசார் வருமானம் அடிப்படையில் வட்டியையும் சீர்மதிப்பு மாற்றத்தினால் ஏற்படும் தேறிய அல்லது தேறாத நயங்களையும் கொண்டிருக்கும். வட்டி வருமானம் சொத்தின் விளைவு வருவாயை கணக்கிற்கொண்டு அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

***முதிர்வுவரை வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்***

ஒரு அமைப்பு கடன் காப்பாவணங்களை அவற்றின் முதிர்வுவரை வைத்திருக்கும் நோக்கத்தையும் இயலுமையும் கொண்டிருந்தால், அவ்வாறான நிதிச் சொத்துக்கள் முதிர்வுவரை வைத்திருக் கப்படும் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். அவை ஆரம்பத்தில் நேர் ஊடு செயற் கிரயங்கள் உள்ளடக்கிய சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும். ஆரம்ப ஏற்பிசைவிற்குப்பின்னர் அவை விளைவு வட்டிமுறையை உபயோகித்தும் ஏதும் சேத இழப்புக்களிருந்தால் அவைகளை கழித்தும் வரும் காலத் தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படும்.

***கடன்களும் வருமதிகளும்***

ABC Sri Lanka கடன்களையும் வருமதிகளையும் அவைகள் நடைந்தேறிய தொகையில் ஏற் பிசைவு செய்யும். ஏனைய எல்லா நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் அமைப்பு கம்பனியின் (சாதனத்தின்) ஒப்பந்த சரத்ததுக்களிற்கும் ஒரு தரப்பினராக உடன்பட்ட திகதியான வியாபாரத் திகதியில் நிலவிய தொகையில் ஏற்பிசைவு செய்யப்படும். கடன்களும் நிலுவையிலுள்ள தொகைக்கு மீளப் பெறாதிருக்கும் இடரிற்கான ஈடளிப்பு (Allowance) தொகையை கழித்துவரும் தொகையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**விற்பனைக்கு கிடைக்கும் நிதிச்சொத்துக்கள்**

*விற்பனைக்கு கிடைக்கும் நிதிச்சொத்துக்கள் என்பது விற்பனைக்கு வைத்திருக்கும் நிதிச்சொத்துக்களாக இனங்காணப்பட்ட நியமிக்கப்பட்ட சொத்துக்களாகவோ அல்லது மேற்காணப் படும் எந்த வகையிலும் வகைப்படுத்தப்படாத சொத்துக்களாகவோ இருக்கும். அவை ஆரம்பத்தில் ஊடுசெயல் கிரயங்கள் உள்ளடங்கலாக சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப் படும். ஆரம்ப ஏற்பிசைவிற்குப்பின்னர் அவைகள் சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும். விற்ப னைக்கு கிடைக்கும் சொத்துக்களின் சேத இழப்பு நட்டங்களும் அந்நியச் செலாவணி வித்தியாசங்களும் ஏனைய முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு உரிமையாண்மையுடன் சேர்த்து முன்னிலைப்படுத்தப்படும். ஒரு முதலீடு ஏற்பிசைவு அகற்றலிற்கு உட்படும்போது, உரி மையாண்மையில் திரண்டிருக்கும் ஆதாயம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தினூடாக மீள்வகைப்படுத்தப்படும்.*

***நிதிச்சொத்துக்களின் சேதவிழப்பு***

ABC Sri Lanka *இன் முன்கொண்டுசெல்லப்படும் சொத்துக்களின் தொகைகள் ஒவ்வொரு அறிக் கையிடற் திகதியிலும் சேதவிழப்பு காட்டி இருக்கின்றதாவென தீர்மானிப்பதற்காக மீளாய்வு செய் யப்படும். அமைப்பு ஒரு நிதிச்சொத்திலோ அல்லது ஒரு தொகுதி சொத்துக்களிலோ உள்ள சேதவிழப்பின் காட்டியை (சான்றை) மதிப்பீடு செய்யும். ஒரு நிதிச் சொத்தோ அல்லது நிதிச் சொத்துக்களின் குழுமமோ ஆரம்ப ஏற்பிசைவிற்கு பின்னர் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் நிமித்தம் அந்தச் சொத்திலோ அல்லது சொத்துக்களின் குழுமத்திலோ சேதவிழப்பு ஏற்பட்டுள்ளதுடன் அந்த சேதவிழப்பு அந்த சொத்தின் அல்லது சொத்துக்கள் குழுமத்தின் வருங் கால காசுப்பாய்வுகளை பாதிக்கும் என்பதற்கான புறச்சான்று இருந்து நம்பகரமாக அளவிடக் கூடியதாகவிருக்கும்போது மாத்திரமே அந்தச் சொத்து அல்லது சொத்துக்களின் குழுமம் சேதவிழப்பிற்கு உள்ளாகியுள்ளதென கருதப்படும்.*

**சேதவழிப்பிற்கான சான்று பின்வருவனவற்றை உள்ளடக்கக்கூடும்:**

*கடனாளிகள் அல்லது ஒரு தொகுதி கடனாளிகள் வட்டியை அல்லது மூலக்கடனை மீளக் கொடுப்பதில் நிதியின்றி இடர்படுதல் அல்லது தவறுதல், அவர்கள் வங்குரோத்திற்கு உள்ளாவதற்கான அல்லது நிதி மீளமைப்பு செய்வதற்கான சாத்தியக்கூறு மற்றும் வருங்கால காசுப் பாய்வுகளில் அளவிடக்கூடிய குறைவை உண்டு பண்ணுவதற்கான சுட்டிகள் அவதானத்திற்கு வருதல் அதாவது, நிலுவையில் மாற்றம் அல்லது தவறுகையுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகள், ஏதும் சுட்டியிருப்பின் சொத்துலிருந்து மீளபெறக்கூடிய தொகை மதிப்பீடு செய்யப்படும்.*

*அதன்பின் சொத்தின் முன்கொண்டுசெல்லப்படும் தொகை மீளப்பெறத்தகு தொகையை மிஞ்சும் போது சேதவிழப்பு நட்டம் ஏற்பிசைவு செய்யப்படும். சேதவழிப்பு நட்டங்கள் முற்றடக்க வருமானக்கூறில் ஏற்பிசைவு செய்யப்படும். மீளப்பெறத்தகு தொகையை மதிப்பீட்டில் தீர்மானிக்க உபயோகித்த மாற்றம் ஏற்பட்டு ஆனால், சேதவிழப்பு நட்டம் ஏற்பிசைவு செய்யப்படாதிருப்பின் தேய்மானம் அல்லது காலத் தேய்மானம் கழித்த பின்னர் சொத்தின் முன்கொண்டுசெல்லும் தொகை தீர்மானிக்கப்பட்ட தொகையை விஞ்சாத அளவிற்கு மாத்திரம் சேத இழப்பு நட்டம் எதிர்ப்பதிவு செய்யப்படும்.*

*3.4* **தொக்குகள்**

*தொக்குகள் கிரயம் மற்றும் நிகர தேறுகை தொகை ஆகிய இரண்டிலும் குறைந்த தொகையில் மதிப்பிடப்படும். நிகர தேறுகை பெறுமதியானது, அந்தத் தொக்குகளை சந்தையில் விற்பதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கும் விலையிலிருந்து அந்த விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட கிரயங்கள் ஏதுமிருப்பின் அவற்றை கழிக்க வரும் தொகை ஆகும்.*

*தொக்கினை தற்போதைய இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருதலில் ஏற்பட்ட கிரயம், மூலப் பொருட்களின் முதல் உள்ளே முதல் வெளியே என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட கிரயம், நேர்க்கூலி மற்றும் வேறேதாவது மேந்தலைகளின் பகிர்வுத் தொகை ஆகியவற்றை உள்ளடக் கும். விநியோகத்திற்காக அல்லது மீள்விற்பனைக்காக கொடையாக வந்த உருப்படிகள், அவை விநியோகப்படும் அல்லது மீள்விற்பனை செய்யப்படும் வரையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படமாட்டாது.*

*3.5* **ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

(a) ***கிரயம் மற்றும் மதிப்பீடு***

*ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண உருப்படிகள் எல்லாம் ஆரம்பத்தில் கிரயத் தில் பதிவீடு செய்யப்படும். பின்பு, எப்போதாவது ஏதாவதொரு உருப்படி மீள்மதிப்பீடு செய்யப்படும்போது, அந்த உருப்படி வகையிலுள்ள எல்லா சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்படும். சொத்துக்களின் மீள் மதிப்புப் பெறுமதி நிதி நிலைமைக்கூற்றுத் திகதியில் அவற்றின் முன்கொணரற் தொகையிலிருந்து பொருண்மையான அளவில் வேறுபடா திருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, போதிய காலக்கிரமத்தில் மேற்கொள்ளப்படும். ஒரு சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவிற்குப் பின், ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகர ணங்கள் தேய்மானம் கழிக்கப்பட்டு வரும் வரலாற்று கிரயத்தில் அல்லது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தால், மீள்மதிப்பீட்டு தொகையில் முன்கொண்டுசெல்லப்படும். இறுதி யான மீள்மதிப்பீட்டிற்குப்பின், சேர்ப்பனவுகள் கிரயத்திலிருந்து தேய்மானம் கழித்த தொகையில் முன்கொண்டு செல்லப்படும்.*

ABC *கம்பனிக்கு உரிமையான கட்டிடங்கள், கம்பனியின் நோக்கங்களிற்கு உபயோகிக்கப்படுவதினால், அவை முதலீட்டு ஆதனத்தின்* (Investment Property) *வரையெல்லைக்குள் வராது.*

(b) ***பின்னைய செலவீனம்***

*பின்னைய செலவினம் அந்த ஆதனம் மற்றும் உபகரண உருப்படியிலிருந்து கிடைக்கும் பொருளாதார பயன்களை அதிகரித்திருந்தால் மாத்திரமே மூலதனப்படுத்தப்படும். ஏனைய சகல செலவினமும் அவை ஏற்படும்போது, முற்றடக்க வருமானக்கூற்றின் செலவாக ஏற்பிசைவு செய்யப்படும்.*

(c) ***தேய்மானம்***

*எல்லா சொத்துக்களுக்கும் நேர்க்கோட்டு முறையில் தேய்மான ஏற்பாடு செய்யப்படுவதுடன் காணி தவிர்ந்த ஏனைய சொத்துக்களின் தேய்மானம் அவற்றின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டு தொகையிலிருந்து ஈற்றுப் பெறுமதி ஏதுமிருப்பின் அதனை கழிக்க வரும் தொகையை அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலமீறாக பதிவழிக்கும் வகையில், அவற்றின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுத்தொகை மீது கணிக்கப்படும்.*

*தற்சமயம்* ABC Sri Lanka *கம்பனி உபயோகிக்கும் வருட வீதங்கள்:*

| *சொத்து* | *வீதம்-ஆண்டிற்கு* |
|---|---|
| *கட்டிடங்கள்* | *2 1/2* % |
| *மோட்டார் வாகனங்கள்* | *20* % |
| *கணினி உபகரணங்கள்* | *33 1/3* % |
| *கணினி மென்பொருள்* | *33 1/3* % |
| *அலுவலக உபகரணங்கள்* | *20* % |
| *தளபாடங்களும் இணைப்புக்களும்* | *10* % |

*(தயவுசெய்து இந்த வீதங்கள் விளக்கக் கூற்றுக்களின் நோக்கங்களிற்காகவேயன்றி, பணிந்துரைகள் அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.)*

(d) **கொடைச் சொத்துக்கள்**

*மட்டுப்படுத்தப்பட்ட நிதிகளின் ஒரு பகுதியாக ஒரு திட்டத்திற்காக கொள்வனவு செய்யப் பட்ட காணி, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் திட்டம் முடியும் வரையில் அல்லது திட்டமுடிவில் சொத்து பயனாளிக்கு அல்லது மூலக் கொடையாளரிற்கு திருப்பிக் கொடுக்கப்படாதபட்சத்து செயற்றிட்ட முடிவில், சொத்தின் கிரயம் நிதிக்கூற்றுக்களின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திற்கான குறிப்பு ஒன்றில் குறித்துக்காட்டப்படும். அம்மாதிரியான சொத்துக்களிற்கு தேய்மானம் ஒதுக்கப்படுவதில்லை.*

***மாற்றுவழிகையாள்கை***

*மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களின் ஒரு பகுதியாக ஒரு செயற்றிட்டத்திற்கு கொள்வனவு செய்யப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் திட்டமுடிவில் சொத்து பயனாளியிற்கு அல்லது மூலக்கொடையாளிற்கு திருப்பிக்கொடாதபட்சத்து, அந்த சொத்து செயற்றிட்ட முடிவில் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காணி, பொறித் தொகுதி மற்றும் உபகரணம் தலைப்பின்கீழ் மூலதன ஒதுக்கமாக உள்ளடக்கப்படும். அதன்கீழ் மதிப்பீட்டு அடிப்படை தரப்படும், அவ்வாறான சொத்துக்களின் தேய்மான ஏற்பாடு ஒதுக்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படும். தேய்மானத்தின் நோக்கத்திற்காக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் மதிப்பீட்டுத் திகதி, கொள்வனவு திகதியாக கருதப்படும்*

***3.6 அருவச் சொத்துக்கள்***

*வேறாக கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்கள் ஆரம்ப ஏற்பிசைவின்போது கிரயத்தில் அள விடப்படும். ஆரம்ப ஏற்பிசைவிற்குப்பின்னர் முடிவற்ற பயனுறு கால சொத்துக்களை தவிர்த்து, ஏனைய சொத்துக்கள் திரள் காலத்தேய்மானம் மற்றும் திரண்ட சேதவிழப்பு நட்ட தொகைகளை கழித்து வரும் கிரயத்தில் முன்கொண்டுசெல்லப்படும். அகத்தே (உள்ளேயே) உற்பத்தியான அருவச் சொத்துக்கள்,* LKAS *38 அருவச் சொத்துக்களின் பிரமாணங்களிற் கமைய பெறுமதி அளவிடமுடியாதபடியால், மூலதனமாக்கப்படுவதில்லை; எனவே, ஏற்பட்ட செலவினம் அந்த ஆண்டுக்கான முற்றடக்க வருமானக் கூற்றில் பிரதிபலிக்கப்படும்.*

*அருவச் சொத்துக்களின் பயனுறு காலம் முடிவுள்ள அல்லது முடிவில்லாத காலமாக இருக்கலாம்.*

*முடிவுறு காலத்தையுடைய அருவச் சொத்துக்கள் பொருளாதார பயனுறு காலத்தில் காலத்தேய் மானம் செய்யப்படுவதுடன் சேதவழிப்பிற்கான சான்றுக்கள் ஏதும் இருப்பின் சேதவிழப்பு மதிப்பீடு செய்யப்படும். ஒரு முடிவுள்ள பயனுறு காலத்தைகொண்ட அருவச் சொத்தின் காலத்தேய்மான காலமும் முறையும் குறைந்தது ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்படும்.*

*சொத்துக்களின் எதிர்கால பயன்களின் எதிர்பார்க்கப்பட்ட பயனுறு காலத்தில் அல்லது நுகர்வு மாதிரியில் மாற்றங்கள் எதிர்பார்க்கப்பட்டால், காலத்தேய்மானக் காலம் அல்லது முறையில் தக்கமாற்றங்களை கைக்கொண்டு அம்மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாக கணக்கிடப்படும். முடிவுறு பயனுறு காலத்தையுடைய அருவச் சொத்துக்களின் காலத்தேய்மானச் செலவு முற்றடக்க வருமான கூற்றில் தேய்மானச் செலவாக ஏற்பிசைவு செய்யப்படும்.*

*முடிவற்ற பயனுறு காலத்தையுடைய அருவச் சொத்துக்கள் சேதவிழப்பிற்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படும். அவ்வாறான சொத்துக்களுக்கு காலத்தேய்மானம் செய்யப்படுவதில்லை. முடிவற்ற பயனுறு காலத்தை உடைய ஒரு அருவச் சொத்தின் பயனுறு காலம் நீடிக்குமா என்பதை தீர்மானிக்க வருடாந்தம் அச்சொத்து மீளாய்வு செய்யப்படும். அப்படியில்லாவிட்டால், நித்திய பயனுறு கால மதிப்பீட்டில் முடிவற்ற காலத்திலிருந்து முடிவுள்ள காலமொன்றிற்கான மாற்றம் அதன்பின் நடமுறைக்கு வரும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.*

*3.7* ***நிதிப் பரிப்புக்கள்***

*ஆரம்ப ஏற்பிசைவின் பின், வட்டியுடைய கடன்கள் காலத்தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்தில் குறிப்பிடப்படும். கிரயத்திற்கும் மீள்கொடுப்பனவு பெறுமதியிற்குமிடையே ஏதேனும் வித்தியாச மிருந்தால், இந்த வித்தியாசம் விளைவு வட்டி அடிப்படையில் கடன்காலம் பூராவும் முற்றடக்க வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.*

*வட்டியில்லாக்கடன்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்பில் பதிவு செய்யப்படும். சீர்மதிப்பானது எதிர்பார்க் கப்படும் எதிர்கால காசுப்பாய்வுகளை சந்தை தொடர்புடைய வீதத்தினால் கழிவிறக்கம் செய்யப் பட்ட தொகையாகும். இந்த கடன்களின் கிரயத்திற்கும் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சீர்மதிப்பிற்குமிடையேயுள்ள வித்தியாசம் பிற்போடப்பட்ட வருமானமாகும். இந்த கடன்களும் பிற்போடப்பட்ட வருமானமும் பின்னர், காலற்தேய்மான கிரயத்தில் தொடர்புடைய சொத்துக்களின் பயனுறு காலத்தினூடாக ஏற்பிசைவு செய்யப்படும்.*

*3.8* ***ஏற்பாடுகள்***

ABC *கம்பனிக்கு கடந்தகால நிகழ்வொன்றின் நிமித்தம் சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடிருந்து, அந்த கடப்பாட்டை தீர்ப்பதற்கு சொத்துக்களின் வெளிப்பாய்வு சாத்தியக்கூறு இருப்பதுடன் கடப்பாடுத் தொகை நம்பகமாக அளவிடக்கூடியதாயிருந்தால், ஒரு ஏற்பாடு நிதி நிலைமைக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். சில அறிக்கையிடப்பட்ட தொழிற்பாட்டு கோரிக்கை களிற்கான ஏற்பாடுகளின் தன்மை மற்றும் உறுதிபாட்டின்மை பற்றி விபரமான தகவல்களை வெளிப்படுத்துல் நடைமுறைச்சாத்தியமற்றதாக இருக்கலாம். தாக்கம் பொருண்மையாய் இருப்பின், காசுப் பெறுமதியின் தற்போதைய மதிப்பீட்டையும் பரிப்பிற்குரிய குறிப்பிட்ட இடர்களையும் பிரதிபலிக்கும்வண்ணம் எதிர்பார்க்கப்படும் எதிர்கால காசுப்பாய்வுகளை கழிவிறக்கம் செய்வதன் மூலம் ஏற்பாடுகள் தீர்மானிக்கப்படும்.*

*3.9* ***ஊழியர் பயன்கள்***

(a) ***<u>வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் - பணிக்கொடை</u>***

*வரையறுக்கப்பட்ட ஓய்வுப் பயன் திட்டமாவது வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டமல்லாத ஒரு ஓய்வூதியப் பயன் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட இளைப்பாறிய பயன் திட்டம், ஒரு ஊழியரின் வயது, பணிக்காலம் மற்றும் ஈடளிப்பு போன்ற காரணிகளின் அடிப்படையில் அவர் இளைப்பாறும் போது பெறக்கூடிய ஓய்வூதியத் தொகை என வரையறுக்கின்றது.*

*நிதிநிலைக் கூற்றில் ஒரு வரையறுக்கப்பட்ட பயன் திட்டத்திற்காக ஏற் பிசைவு செய்யப் படும் பரிப்புத்தொகை நிதிநிலைக்கூற்றுத் திகதியில் நிலவும் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் இற்றைபடுத்தப்பட்ட தொகையையும் கடந்தகால சேவைக்காக ஏற்பிசைவு செய்யப்படாதமைக்கான செம்மையாக்கங்களையும் உள்ளடக்கும். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடு ஆயுட்கால காப்பீட்டு மதிப்பீட்டாளர்களினால் எதிர்வு கூறக்கூடிய அலகு வரவு முறையை உபயோகித்து கணிக்கப்படும். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் இற்றை பெறுமதி நீண்டகால அரசு முறிகளின் அல்லது உயர்தர கூட்டிணைப்பு முறிகளின் வட்டிவீதங்களை உபயோகித்து எதிர்கால காசுப்பாய்வுகளின் மதிப்பீட்டை கழிவிறக்கம் செய்யப்பட்ட தொகையாக தீர்மானிக்கப்படும்.*

*வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களின் மாற்றங்கள் ஊழியர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஊழியத்தில் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையிற்கு உட்பட்டிருந்தாலொழிய, (உரித்தாக்க காலம்), கடந்தகால சேவைக் கிர யங்கள் உடனடியாக வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு நேர்க்கோட்டு அடிப்படையில் கடந்த கால சேவைக் கிரயங்கள் உரித்துக்காலத்தில் காலத்தேய்மானம் செய்யப்படும்.* ABC Sri Lanka *கம்பனி ஆயுட்கால காப்பீட்டு ஆதாயங்களை அல்லது நட்டங்களை ஏற்பிசைவு செய்வதற்கு வீச்செல்லை முறையை* (Corridor method) *ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி* ABC *கம்பனி முற்றடக்க வருமானக்கூற்றில் கீழ்வருவனவற்றில் பெரிதான தொகையை விஞ்சும் திரண்ட ஆயுட்கால மதிப்பீட்டு ஆதாயங்கள் மற்றும் நட்டங்களின் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஏற்பிசைவு செய்யும்:*

(i) *வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் இற்றை பெறுமதியில் (திட்டச் சொத்துக் களை கழிக்கும் முன்பு) 10%; மற்றும்*

(ii) *திட்டச் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றின் சீர்மதிப்பின் 10%.*

(b) ***<u>வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்</u>***

*தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் எல்லா ஊழியர்களும் சேம லாப நிதியத்திற்கும் ஊழியர்களின் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்வதற்கு தகைமையுடையவர்களாவர்.* ABC Sri Lanka *கம்பனி ஊழியர்களின் சேமலாப நிதியத்திற் கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் முறையே ஊழியர்களின் மொத்த சம்பளங்களில் 12% மற்றும் 3% பங்களிப்பு செய்கின்றது.*

*3.10* ***நிதியங்கள்/ஒதுக்கங்கள் ஆகியவற்றை பெறுவதற்கும் உபயோகிப்பதற்குமான கணக்கீடு***

***ஒதுக்கங்கள்***

*ஒதுக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்படாத ஒதுக்கங்களாக வகைப்படுத்தப் படும்.*

(a) ***<u>மட்டுப்படுத்தப்படாத ஒதுக்கங்கள்/நிதியங்கள்</u>***

*மட்டுப்படுத்தப்படாத நிதியங்களாவன* ABC Sri Lanka *இன் பொது நோக்கங்களை மேம் படுத்துவதற்காக கம்பனியின் விருப்பின்படி உபயோகிக்கக் கூடிய நிதியங்களாயிருப்பதுடன் அவைகள் குறிப்பிட்ட நோக்கங்களிற்கு நியமிக்கப்படாதிருக்கும் நிதியங்களாகும்.*

*மிகையான நிதியங்கள் கொடை ஒப்பந்தங்களின் கட்டுறுப்புகளிற்கிணங்க அல்லது கொடையாளியின் பின்ஒப்புதலின்பேரில் மட்டுப்படுத்தப்படாத நிதியங்களிற்கு மாற்றப்படும்.*

*பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு பணம் காசு அடிப்படையில் முற்றடக்க வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.*

(b) **நியமிக்கப்பட்ட ஒதுக்கங்கள்/நிதியங்கள்**

ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக சபையினால் நியமிக்கப்பட்ட மட்டுப்படுத் தப்படாத நிதியங்கள் நியமிக்கப்பட்ட நிதியங்களாக இனங்காணப்படும். இந்த நிதியங்களின் செயற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படும்.

(c) **மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கங்கள்/நிதியங்கள்**

மானியங்கள் ஒரு இனங்காணப்பட்ட திட்டத்திற்கு அல்லது செயற்பாட்டிற்கென பெறப்படும் போது அம்மாதிரியான மானியங்கள் ஒரு மட்டுப்படுத்தப்படாத நிதியக் கணக்கில் வைக்கப்பட்டு இனங்காணப்பட்ட திட்டச் செலவுகளுடன் இணையும் வகையில் முற்றடக்க வரு மானத்திற்கு மாற்றப்படும். பயன்படுத்தப்படாத நிதியங்கள் அவற்றுடன் தொடர்புடைய நிதியக் கணக்குகளில் வைக்கப்பட்டு, அவைகளின் உபயோகத் தேவைகள் வரும் வரை நிதி நிலைக்கூற்றில் திரண்ட நிதியத்தின் தலைப்பின்கீழ் காண்பிக்கப்படும்.

ஒரு குறிப்பிட்ட அல்லது வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்கு நிதி திரட்டும் செயற்பாட்டு மூலம் சேகரிக்கப்பட்ட நிதியும் இந்த தலைப்பின்கீழ் காண்பிக்கப்படும்.

அனுமதிக்கப்பட்ட மானியச் செலவு பெறப்பட்ட வருமானத் தொகையை விஞ்சும்பட்சத்து, விஞ்சிய தொகையை பெறுவதற்கான உறுதிப்பாடு இருப்பின் அந்த தொகை நிதிநிலைக் கூற்றில் கடன்படுனர்களாக ஏற்பிசைவு செய்யப்படும்.
இந்த மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள் உபயோகிக்கக்கூடிய அல்லது உபயோகப்படும் செயற்பாடுகள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் இனங்காணப்படும்.

(e) **அறக்கொடை ஒதுக்கங்கள் நிதியங்கள்**

அறக்கொடையாக பெறப்பட்ட சொத்துக்கள் முழுமையாக உபயோகிக்கப்படாதவிடத்து, அச்சொத்துக்களிலிருந்து வந்த வருமானம் மாத்திரமே ஏற்பிசைவு செய்யப்பட்டு வருமானமாக உபயோகிக்கப்படும்.

(f) முதலீட்டு வருமானமும் மேலே வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு நிதியங்களின்கீழ் தேறப்பட்ட வேறு இலாபங்களும் தொடர்புடைய ஒப்பந்தம் அல்லது நடவடிக்கை குறிப்பேடு வேறுவகை யாக சொல்லியிருந்தாலொழிய, தக்க நிதியங்களிற்கு ஒதுக்கப்படும்.

*3.11* **கொடைகளும் மானியங்களும்**

கொடைகளும் மானியங்களும் நிதிக்கூற்றுக்களில் அவற்றின் சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப் படும். ஒரு மானியமோ உதவித் தொகையோ ஒரு செலவுடன் தொடர்புபடும்போது, கிரயத்துடன் பொருத்தம் காணுவதற்கு அவசியமான காலமீறாத, ஒரு சீரான வகையில், அது வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

சொத்துக்களோடு தொடர்புடைய கொடைகளும் மானியங்களும் உதவுத் தொகைகளும் நிதி நிலைக்கூற்றில் பிற்போடப்பட்டு சொத்தின் பயனுடைய காலம்பூராவும் முற்றடக்க நிதிக்கூற்றில் செலவுப்பதிவு செய்யப்படும்.

ஒரு திட்டம் அல்லது செயற்பாட்டு முழுவதற்குமாக கொடை பெறப்படும் சந்தர்ப்பத்தில் அது சொத்தொன்றின் கொள்வனவையும் உள்ளடக்கியிருந்து அத்தகைய சொத்தின் கிரயம் முற்ற டக்க வருமானக்கூற்றில் செயற்றிட்ட கிரயக்கணக்கில் தாக்கல் செய்யப்படுமாகில், கொடைப் பெறுமதி அதே காலத்தில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும். செயற்றிட்ட முடிவில் அந்த சொத்து பயனாளிக்கு அல்லது மூல கொடையாளிக்கு திருப்பிக்கொடாதபட்சத் தில் அந்தச் சொத்தின் கிரயம் அவ்வாறாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களிற்கான குறிப்பேட்டில் உள்ளடக்கப்படும்.

*3.12* **குத்தகைகள்**

(a) **நிதிக் குத்தகைகள்**

நிதிக்குத்தகைகள்மூலம் பெறப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அவை நிதிக் குத்தகைமூலம் வரும் சொத்துரிமையோடு உள்ளடங்கிய இடர்களையும் பயன்களையும் பெரும்பாலும் ABC Sri Lanka இற்கு மாற்றுவதால், அவை காசு விலை யில் மூலதனமாக்கப்பட்டு வெளிப்படுத்தலுடன் ABC Sri Lanka குத்தகை சொத்துக்களி லிருந்து எதிர்பார்க்கும் பயன்படு காலத்தில் தேய்மானம் செய்யப்படும்.

குத்தகையாளரிற்கு கொடுக்கப்பட வேண்டிய சம்பந்தப்பட்ட மூலத்தொகை ஒரு பரிப்பாக காண்பிக்கப்படும். குத்தகை கொடுப்பனவுகள் நிதிக்கிரயங் களாகவும் குத்தகைத் தொகையை குறைக்கும் தொகைகளாகவும் பகுக்கப்படும். நிதிக் கிரயங்கள் மிஞ்சியிருக்கும் மிகுதிகளின்மீதான மாற்ற மில்லாத வட்டிவீதத்தை பிரதிபலிக்கும். குத்தகைக் காலத்திற்காகக் கொடுக்க வேண்டிய வட்டி தொங்கள் கணக்கில் வைக்கப்படும். ஒவ் வொரு நிதி ஆண்டிற்கான வாடகை கடப்பாட்டின் வட்டிப் பகுதியும் அந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக்கூற்றில் தாக்கல் செய்யப்படும்.

(b) **தொழிற்பாட்டு குத்தகைகள்**

எங்கு குத்தகையாளர் குத்தகை சொத்துக்களின் பெரும்பாலான இடர்கள் மற்றும் பயன்க ளிற்கு குத்தகைக்காலம் பூராவும் உரித்துடையவராகவிருக்கின்றாரோ, அவ்வாறான குத்தகைகள் தொழிற்பாட்டு குத்தகைகளாக வகைப்படுத்தப்படும். தொழிற்பாட்டு குத்தகை களின்கீழ் கொடுக்கப்படும் வாடகைகள் முற்றடக்க வருமானக்கூற்றில் குத்தகைக்காலம் பூராவும் நேர்க்கோட்டு அடிப்படையில் ஒரு செலவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

*3.13* **வருமான ஏற்பிசைவு**

(a) **பங்களிப்புக்கள்/உள்வரும் மூலவளங்கள்**

மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களிலிருந்து தேறப்பட்ட வருமானம், நிதியங்களை பெறுவதற்கான சகல நிபந்தனைகளுடன் இசைவடைந்து தொடர்புடைய செலவினம் இறுக்கப் பெற்று முற்றடக்க வருமானக்கூற்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் மாத்திரமே முற்ற டக்க வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். உபயோகிக்கப்படாத நிதியங்கள் அவ்வாறான நிதியங்களாக நிதிநிலைக்கூற்றில் முன்கொண்டுசெல்லப்படும்.
பணம்சாராதபரிசுகளாகவும் கொடைகளாகவும் பெறப்பட்டவை பயனாளிகளிற்கு விநியோகம் செய்யப்படும்போது மதிப்பீட்டு பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படும் அல்லது அவற்றின் மீள்விற்பனையிலிருந்து வரும் வருமானம் ABC Sri Lanka இன்

பாவனையிற்கு என்றிருந்தால், மீள்விற்பனை கட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். விற்பனை செய்யப்படாத அல்லது பகிரப்படாத உருப்படிகள் தொக்குகளாக கொள்ளப்படுகின்ற போதிலும், நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட மாட்டா.

ஏனைய எல்லா வருமானமும் வருமானத்தை உபயோகிப்பதற்கான சட்டரீதியான உரி மையை பெற்றிருக்கும் பட்சத்தும் தொகை அளவிடக்கூடியதாய் இருக்கும்பட்சத்தும் ஏற் பிசைவு செய்யப்படும்.

(b) **வருமானம்**

உழைக்கப்பட்ட வட்டி அட்டூறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

பங்கு இலாபம் அது பெறுவதற்கான உரிமை உறுதிப்பட்டவுடன் ஏற்பிசைவு செய்யப்படும்.

சேவைகளிற்காக பெறப்படும் வருமானம் சேவைகள் வழங்கப்பட்ட கணக்கீட்டு காலத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய முதலீடுகள் உட்பட நடைமுறையல்லாச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் நிகர ஆதாயம் மற்றும் நட்டங்கள் முற்றடக்க வருமானக்கூற்றில் விற்பனைமூலம் கிடைத்த தொகைகளிலிருந்து விற்பனைக்குள்ளான உருப்படியின் முன்கொணரற் தொகையும் விற்பனையோடு தொடர்புடைய விற்பனை செலவுகளும் கழிக்கப்பட்டு வரும் தொகையில் ஏற்பிசைவு செய்யப்படும். மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களை பொறுத்தமட்டில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் எஞ்சியிருக்கும் மிகுதி முற்றடக்க வருமானக்கூற்றிற்கு மாற்றப்படும்.

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.14 **செலவின் ஏற்பிசைவு**

ABC Sri Lanka இன் செயற்றிட்டங்களையும் வேறு செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட செலவுகள் அவை ஏற்பட்ட காலத்தில் முற்றடக்க வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். ABC Sri Lanka இனை நிர்வகிப்பதில் ஏற்பட்ட செலவுகள் மற்றும் ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் செயல்பட வைப்பதில் ஏற்பட்ட செலவுகள் அட்டூறு அடிப்படையில் கணக்கிடப்பட்டு முற்றடக்க வருமானக்கூற்றில் தாக்கல் செய் யப்படும்.

ABC Sri Lanka அதன் செயற்பாடுகளின் கூறுகளை முற்றடக்க வருமானக்கூற்றில் நியாயமாக முன்னிலைப்படுத்துவதற்காக 'செலவின் தொழிற்பாடு' முறையைக் கைக்கொண்டுள்ளது.

3.15 வரியீடு

(a) நடப்பு வரிகள்

ABC Sri Lanka இன் இலாபங்களின்மீதான வருமானவரி 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இறைவரிச் சட்டத்திற்கிணங்கவும் பிரிவு 96(அ) இற்கிணங்கவும் ஏற்பாடு செய்யப்படும். வரியானது, முற்றடக்க வருமானக்கூற்றில் பிரதிபலிக்கப்படும் வருமானம் மற்றும் செலவுக் கூறுகளின் அடிப்படையிலும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல. ...... இல் குறிப்பிடப்பட்ட விலக்களிப்பிற்கமைவாக பெறப்பட்ட கொடைகளின் மூலகங்களின் அடிப் படையிலும் அமையும்.

(b) பிற்போடப்பட்ட வரிகள்

பிற்போடக்கூடிய வரி நிதிநிலைக்கூற்றில் காணப்படும் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் பெறுமதிகளிற்கும் வரி நோக்கத்திற்காக நிரல்படுத்தப்பட்ட அச்சொத்துக்கள் மற்றும் பரிப் புக்களின் பெறுமதிகளிற்குமிடையேயான வித்தியாசத்தின் அடிப்படையில் வித்தியாசத்தில் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் நேர்மாறாக (எதிர்திசையில்) மாறாதிருக்கும் விதியாசங் களிற்கு தேவையான செம்மையாக்கங்கள் செய்யப்பட்டு ஏற்பாடு செய்யப்படும்.

அத்தகைய பிற்போடப்பட்ட வரிகளின் முன்கொண்டுசெல்லப்படும் தொகை ஒவ்வொரு நிதி நிலைக்கூற்றின் திகதியிலும் மீளாய்வுச் செய்யப்பட்டு உட்புகுத்தப்படும் புதுச் சொத்துக் களின் நிமித்தம் அதிகரிக்கப்படும் அல்லது பிற்போடப்பட்ட வரிச் சொத்து முழுமையா கவோ பகுதியாகவோ உபயோகிக்கக்கூடிய அளவிற்கு போதிய வரிக்குள்ளாகும் இலாப மிருப்பதற்கான சாத்தியக்கூறில்லாதபட்சத்து பிற்போடப்பட்ட வரி குறைக்கப்படும்.

(c) பெறுமதிசேர் வரிகள்

பெறுமதிசேர் வரிகள் (VAT) ஆவன இறக்குமதி செய்யப்படும் சில உருப்படிகளின்மீது சுமத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்படும் அவ்வாறான உருப்படியின் கிரயத்தில் உள்ளடக் கப்படும். விதிவிலக்காக சம்பந்தப்பட்ட உருப்படி இன்னும் வந்து சேராதபட்சத்து, வரி நிதிக்கூற்றில் ஒரு சொத்தாக காண்பிக்கப்படும்.

3.16 **கடன்படு கிரயங்கள்**

ஒரு தகுதிபெறு சொத்தை சுவீகரிக்கப்பது, நிருமாணிப்பது அல்லது உற்பத்திசெய்வதோடு நேரடியாக தொடர்புடைய கடன்படு கிரயங்கள் அந்தச் சொத்தின் கிரயத்தின் பகுதியாக மூலதனமாக் கப்படும். ஏனைய கடன்படு கிரயங்கள் அவை ஏற்பட்ட காலத்தில் ஒரு செலவாக கொள்ளப் படும்.

3.17 **நிதி வருமானமும் செலவும்**

நிகர நிதி வருமானம் (குறிப்பு XXX ஐப் பார்க்கவும்) கடனிற்கான வட்டி கொடுப்பனவு, முதலீட்டு நிதியங்களிலிருந்து வருமதியாகவுள்ள வட்டி, பிணையங்களின் வட்டி மற்றும் தளம்பற் காப்பு சாதனங்களின் (கருவிகளின்) ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். வட்டி வருமானம் சொத்தின் விளைவுத்திறன் வருவாயை கணக்கிட்டுக்கொண்டு அட்டுறு அடிப் படையில் முற்றடக்க வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.18 **உறுமுரிமைப் பரிப்புக்கள்**

ஒரு உறுமுரிமைப் பரிப்பானது, கடந்தகால நிகழ்வுகளின் நிமித்தம் ஏற்படக்கூடிய சாத்தியப்பாட்டை கொண்ட ஒரு கடப்பாடாகும். அவ்வாறான நிகழ்வுகளின் இருப் பும், நிகழ்வு அல்லது நிகழாதன்மையும் முகாமையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட உறுதியற்ற வருங்கால நிகழ்வுகள் மாத்திரமே உறுதி செய்யும். அது ஒரு கடந்தகால நிகழ்வுகளின் நிமித்தம் ஏற்படும் ஒரு நிகழ்கால கடப்

பாடாகவும் இருக்கக்கூடும். ஆனால், இதன் விளைவாக பொருளாதார பயன் களின் வெளிவாய்ப்பிற்கான சாத்தியப்பாடு இல்லாமலோ அல்லது வெளிப்பாய் வின் தொகை போதிய அளவிற்கு நம்பகமாக அளவிடமுடியாது இருக்கலாம். அப்படியான உறுமுரிமைப் பரிப்புக்கள் குறிப்பு XX இன்கீழ் காட்டப்பட்டுள்ளன. சில அறிக்கையிடப்பட்டுள்ள தொழிற்பாட்டு கோரிக்கைகளிற்கு அவைகளின் தன்மை மற்றும் உறுதிப்பாடின்மை பற்றி விரிவான தகவல்களை தருவது நடைமுறை சாத்தியமற்றது.

**4. நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்**

*4.1 ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்*

(a)

| உருப்படி | 01.04.2012 ஆந் திகதி மீதிகள் | வருடத்தின்போது சேர்ப்பனவுகள் | வருடத்தின்போது விற்பனவுகள் | 31.03.2013ஆந் திகதி மீதிகள் |
|---|---|---|---|---|
| **கிரயத்தில்/மதிப்பீட்டில்** | | | | |
| காணி | XXXX | XXXX | XXXX | XXXX |
| கட்டிடங்கள் | XXXX | XXXX | XXXX | XXXX |
| மோட்டார் வாகனங்கள் | XXXX | XXXX | XXXX | XXXX |
| கணினி உபகரணம் | XXXX | XXXX | XXXX | XXXX |
| கணினி மென்பொருள் | XXXX | XXXX | XXXX | XXXX |
| அலுவலக உபகரணம் | XXXX | XXXX | XXXX | XXXX |
| தளபாடங்களும் இணைப்புக் | XXXX | XXXX | XXXX | XXXX |
| களும்மூலதன புத்துருவாகும் வேலை | XXXX | XXXX | XXXX | XXXX |
| **மொத்தம்** | XXXX | XXXX | XXXX | XXXX |

| உருப்படி | 01.04.2012 ஆந் திகதி மீதிகள் | வருடத்திற்கான அளவீடுகள் | வருடத்திற்கான விற்பனவுகள் | 31.03.2013ஆந் திகதி மீதிகள் |
|---|---|---|---|---|
| **கிரயத்தில்/மதிப்பீட்டில் தேய்மானம்** | | | | |
| காணி | XXXX | XXXX | XXXX | XXXX |
| கட்டிடங்கள் | XXXX | XXXX | XXXX | XXXX |
| மோட்டார் வாகனங்கள் | XXXX | XXXX | XXXX | XXXX |
| கணினி உபகரணம் | XXXX | XXXX | XXXX | XXXX |
| கணினி மென்பொருள் | XXXX | XXXX | XXXX | XXXX |
| அலுவலக உபகரணம் | XXXX | XXXX | XXXX | XXXX |
| தளபாடங்களும் இணைப்புக் | XXXX | XXXX | XXXX | XXXX |
| களும் மூலதன புத்துருவாகும் வேலை | XXXX | XXXX | XXXX | XXXX |
| மொத்தம் | XXXX | XXXX | XXXX | XXXX |
| சொத்துக்களின் நிகர ஏட்டுப் பெறுமதி | | | | |
| கிரயத்தில் | XXXX | XXXX | XXXX | XXXX |
| மதிப்பீட்டில் | XXXX | XXXX | XXXX | XXXX |
| மொத்தம் | XXXX | XXXX | XXXX | XXXX |

(b) சொத்துக்களின் நிகர ஏட்டுப் பெறுமதியின் பிரிவுவாரி பகுப்பாய்வு

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| **பிரிவு** | | |
| வீடளிப்பிற்கான ஏற்பாடு | XXXX | XXXX |
| மீன் வளம் | XXXX | XXXX |
| ஏனைய செயற்றிட்டம் | XXXX | XXXX |
| நிர்வாகம் | XXXX | XXXX |
| | **XXXX** | XXX |

(c) நிதிநிலைமைக்கூற்றில் உள்ளடங்காத செயற்றிட்டச்சொத்துக்கள்
கிரயத்தில்/மதிப்பீட்டில்

| உருப்படி | 01.04.2012 ஆந் திகதி மீதிகள் | வருடத்திற்கான சேர்ப்பனவுகள் | வருடத்தில் மூலதன மாக்கப்பட்டவைகள் | வருடத்தில் மாற்றத்திற்குள் ளானவை | 31.03.2013ஆந் திகதி மீதிகள் |
|---|---|---|---|---|---|
| கட்டிடங்கள் | xxxx | xxxx | xxxx | xxxx | xxxx |
| வாகனங்கள் | xxxx | xxxx | xxxx | xxxx | xxxx |
| கணினி உபகரணம் | xxxx | xxxx | xxxx | xxxx | xxxx |
| கணினி மென்பொருள் | xxxx | xxxx | xxxx | xxxx | xxxx |
| அலுவலக உபகரணங்கள் | xxxx | xxxx | xxxx | xxxx | xxxx |
| தளபாடங்களும் இணைப்புக்களும் | xxxx | xxxx | xxxx | xxxx | xxxx |
| மொத்தம் | xxxx | xxxx | xxxx | xxxx | xxxx |

4.2 அருவச் சொத்துக்கள்

| உருப்படி | 01.04.2012 ஆந் திகதி மீதிகள் | வருடத்திற்கான சேர்ப்பனவுகள் | வருடத்திற்கான விற்பனவுகள் | 31.03.2013ஆந் திகதி மீதிகள் |
|---|---|---|---|---|
| **கிரயத்தில்/மதிப்பீட்டில்** | | | | |
| மென்பொருள் | xxxx | xxxx | xxxx | xxxx |
| சின்னம் | xxxx | xxxx | xxxx | xxxx |
| **மொத்தம்** | xxxx | xxxx | xxxx | xxxx |

| உருப்படி | 01.04.2012 ஆந் திகதி மீதி | ஆண்டிற்கான அறவீடு | 31.03.2013ஆந் திகதி மீதி |
|---|---|---|---|
| **காலத்தேய்மானம்** | | | |
| மென்பொருள் | xxxx | xxxx | xxxx |
| சின்னம் | xxxx | xxxx | xxxx |
| மொத்தம் | xxxx | xxxx | xxxx |

4.3 நீண்ட கால வருமதிகள்

**மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

| | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| பிற்போடப்பட்ட வருமானம் | **XXXX** | XXXX |
| மொத்தம் | **XXXX** | XXXX |

4.4 ஏனைய நிதிச் சொத்துக்கள்

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| நாணய முன்னாற்று ஒப்பந்தங்கள் | **XXXX** | XXXX |
| உத்தரவாத வைப்புக்கள் | **XXXX** | XXXX |
| மொத்தம் | **XXXX** | XXXX |

4.5 தொக்குகள்

**மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

| | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| நுகர் பொருட்கள் | **XXXX** | XXXX |
| நிர்வாகம், அடையாளம் காணல் மற்றும் பாதுகாப்பு | **XXXX** | XXXX |
| பிரசுரங்கள் | **XXXX** | XXXX |
| புத்துருவாகும் வேலை | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | **XXXX** | XXXX |

செலவுக்கு தாக்கல் செய்யப்பட்டு பதிவழிப்பு செய்யப்பட்ட தொக்குகளின் தொகை ரூபா XXX.

4.6 **வருமதிக் கணக்குகள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| காப்பீடுகள் | **XXXX** | XXXX |
| தேசிய சபைகள் அமைப்புக்கள் மற்றும் நிதியங்கள் | **XXXX** | XXXX |
| பிடித்துவைக்கப்பட்ட வரிகள் | **XXXX** | XXXX |
| ஏனைய வருமான வருமதிகள் | **XXXX** | XXXX |
| வருமதிக் கணக்குகளுக்கான கழிவுகள் | **XXXX** | XXXX |
| மொத்தம் | **XXXX** | XXXX |

4.7 **முன் கொடுப்பனவுகள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| செலவின முன் கொடுப்பனவுகள் | **XXXX** | XXXX |
| விநியோகங்களுக்கு முற்கொடுப்பனவு | **XXXX** | XXXX |
| சமூகப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி பங்களிப்புக்கள் | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | **XXXX** | XXXX |

4.8 **ஏனைய நிதிச் சொத்துக்கள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| இலாப நட்டத்திற்கூடான சீர்மதிப்புச் சொத்துக்கள் | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | **XXXX** | XXXX |

4.9 **காசும் காசு சமமானவைகளும்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| காசுக் கையிருப்பு | **XXXX** | XXXX |
| வங்கி காசு | **XXXX** | XXXX |
| குறுங்கால வைப்புக்கள் | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | **XXXX** | XXXX |

வங்கியிலிருக்கும் காசு தினசரி வங்கி வீதத்தின் அடிப்படையில் மிதக்கும் வீதத்தில் வட்டியை சம் பாதிக்கின்றது. குறுங்கால வைப்புக்கள் ABC கம்பனியின் உடனடி தேவைப்பாடுகளிற்கு உட்பட்டு ஒரு நாளுக்கும் மற்றும் மூன்று மாதகாலத்திற்கிடையேயான காலப்பகுதிகளுக்கு வைக்கப்பட்டு குறுங்கால வட்டி வீதத்தின் அடிப்படையில் வட்டியை சம்பாதிக்கும்.

*31 மார்ச், 2013 இல்* ABC கம்பனியிற்கு அர்ப்பணிப்பிற்குள்ளான ஆனால், உபயோகிக்கப்படாத ரூபா XXXXX (*2012 :* ரூபா XXX) கடன்பெறு வசதிகள் இருந்தன.
காசுப்பாய்வுக் கூற்றின் நோக்கத்திற்காக மார்ச் 31 இல் காசும் காசுசமமானவைகளும் கீழ்க்காண்பவைகளை உள்ளடக்கியிருந்தன:

| | *31.3.2013* | *31.3.2012* |
|---|---|---|
| காசு, காசு சமமானவை | XXXX | XXXX |
| வங்கியின் மேலதிகப்பற்று | XXXX | XXXX |
| **காசுப்பாய்வுக் கூற்றின் மொத்த காசும் காசு சமமானவைகளும்** | XXXX | XXXX |

4.10 **மட்டுப்படுத்தப்படாத ஒதுக்கங்கள் /நிதிகள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| ஆண்டு ஆரம்பத்தில் மிகுதி | **XXXX** | XXXX |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளில் மட்டுப்படுத்தப்படாத மிகை/ பற்றாக்குறை | **(XXXX)** | XXXX |
| வருட முடிவு மிகுதி | **XXXX** | XXXX |

*4.11* **நோக்கம் நிர்ணயிக்கப்பட்ட நிதிகள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| ஆண்டு ஆரம்ப மிகுதி | **XXXX** | XXXX |
| வருடத்தில் பெறப்பட்ட மேலதிக நிதிகள் | | |
| முற்றடக்க வருமானக் கூற்றிற்கு மாற்றப்பட்டது | **(XXXX)** | (XXXX) |
| ஆண்டு இறுதி மிகுதி | **XXXX** | XXXX |
| **நோக்கம் கீழ்க்காண்பவைகளிற்கு நிர்ணயிக்கப்பட்டது** | | |
| அலுவலக இட விஸ்தீரணத்திற்கும் புதுப்பிப்பதற்கும் | **XXXX** | XXXX |
| ஊழியர்சேமநலன் | **XXXX** | XXXX |
| | **XXXX** | XXXX |

*4.12* **மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| வருட ஆரம்ப மிகுதி | **XXXX** | XXXX |
| வருடத்தில் பெறப்பட்ட மேலதிக நிதியங்கள் | **XXXX** | XXXX |
| முற்றடக்க வருமானக்கூற்றிற்கு மாற்றப்பட்டவை | **(XXXX)** | XXXX |
| மட்டுப்படுத்தப்படாத நிதிகளிற்கு மாற்றப்பட்டது | **(XXXX)** | XXXX |
| ஆண்டு இறுதி மிகுதி | **(XXXX)** | XXXX |

செயற்றிட்டவாரியாக மட்டுப்படுத்தப்பட்ட நிதிகளின் ஒதுக்கமும் மாற்றமும்

| *கொடையாளி நிறுவனத்தின் பெயர்* | *செயற்றிட்டம்* | *முன்கொண்டு வரப்பட்ட மிகுதி* | *ஆண்டுக்காலப்பகுதியில் பெறப்பட்ட/மட்டுப்படுத் தப்பட்ட மேலதிகம்* | *வருமான மற்றும் செலவிற்கு மாற்றப் பட்டவை* | *மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் மீதான வட்டி வருமானம்* | *முன்கொண்டு செல்லப்பட்ட மிகுதி* |
|---|---|---|---|---|---|---|
| ABC | | | | | | |
| GHI | | | | | | |
| MNO | | | | | | |
| XYZ | | | | | | |
| **மொத்தம்** | | | | | | |

*4.13* **அறக்கொடை நிதியங்கள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| ஆண்டின் ஆரம்ப மிகுதி | **XXXX** | XXXX |
| ஆண்டிற்கான மிகை/குறைவு | **(XXX)** | (XXX) |
| ஆண்டின் இறுதியில் மிகுதி | **(XXXX)** | XXXX |

ஆண்டின் இறுதியில் கொண்ட அறக்கொடை நிதிகள் கீழ்வருவனவற்றை கொண்டிருந்தன.

| | | |
|---|---|---|
| .................................... | **XXXX** | XXXX |

*4.14* **ஏனைய மூலதன ஒதுக்கங்கள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| ஆண்டின் ஆரம்ப மிகுதி | **XXXX** | XXXX |
| ஆண்டிற்கான மிகை/குறைவு | **(XXX)** | (XXX) |
| ஆண்டின் இறுதியில் மிகுதி | **(XXXX)** | XXXX |

*4.15* **கடன்களும் குறுங்கால கடன்களும்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| காப்பீடும் வட்டியுமில்லா கடன்கள் | **XXXX** | XXXX |
| ***கழிக்க*** : நடப்பு பாகம் | **(XXX)** | (XXX) |
| ஆண்டு முடிவு மிகுதி | **(XXXX)** | XXXX |

கட்டடங்கள் தொடர்பாக இரண்டு வட்டியில்லா கடன்கள் ஒரு அரச நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வட்டியில்லா கடன்கள் ஆரம்ப ஏற்பிசைவின்போது சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப் பட்டன. சீர்மதிப்பிற்கும் கிரயத்திற்குமிடையேயான வித்தியாசம் பிற்போடப்பட்ட வருமானத்தில் காட்டப்பட்டுள்ளன. (குறிப்பு XX ஐப் பார்க்கவும்). 31 மார்ச்சு, 2013 இல் இந்த நடைமுறையல்லாத கடன்களின் சீர்மதிப்பு ரூபா XXXX ஆகும். அளிக்கப்பட்ட சேவைக்கான பெயரளவிலான வட்டி ரூபா XXXX (2012: ரூபா XXX) செலவாகவும் வருமானமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**4.16 ஊழியர் நலன்புரி பரிப்புக்கள்**

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| ஏப்பிறல் 1 இல் மிகுதி | **xxxx** | xxxx |
| நடப்பு சேவைக் கிரயம் | **xxxx** | xxxx |
| கடந்தகால சேவைக் கிரயம் | **xxxx** | xxxx |
| வட்டிக் கிரயம் | **xxxx** | xxxx |
| ஆயுட்கால முறை நட்டங்கள்/(ஆதாயங்கள்) | **xxxx** | xxx |
| ஆண்டுக் காலப்பகுதியில் நலன்புரி கொடுப்பனவுகள் | **(xxx)** | (xxx) |
| மார்ச் 31 ஆந் திகதியன்று மிகுதி | **(xxxx)** | xxxx |

முற்றடக்க வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள் கீழ்க்கண்டவாறு:

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| நடப்பு சேவைக் கிரயம் | **xxxx** | xxxx |
| கடந்தகால சேவைக் கிரயம் | **xxxx** | xxxx |
| வட்டிக் கிரயம் | **xxxx** | xxxx |
| மார்ச் 31 ஆந் திகதியன்று மிகுதி | **xxxx** | xxxx |

இந்த கடப்பாட்டிற்கு புறத்தேயிருந்து நிதியளிக்கப்படவில்லை.

**4.17 பிற்போடப்பட்ட வருமானம்**

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| காப்பீட்டுடன் தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வருமானம் | **xxxx** | xxxx |
| அரச கடனோடு தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வருமானம் | **xxxx** | xxxx |
| மார்ச் 31 ஆந் திகதியன்று மிகுதி | **(xxxx)** | xxxx |

**4.18 சென்மதி கணக்குகள்**

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| கொடையாளிகளுக்கு மீள்ச் செலுத்தவேண்டியவை | **xxxx** | xxxx |
| வழங்குநர்கள் | **xxxx** | xxxx |
| சில்லறை உருப்படிகள் | **xxxx** | xxxx |
| மொத்தம் | **(xxxx)** | xxxx |

**மேற்காணப்படும் நிதிப் பரிப்புக்களிற்கான கட்டுறுப்பக்களும் நிபந்தனைகளும்:**

* அரசாங்கங்கள், தேசிய சபைகள், அமைப்புக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான நிதிகளும் வழங்குதல்களும் வட்டிக்கு உட்படாது வழக்கமாக 30 நாட்களில் தீர்க்கப்பட வேண்டியவைகளாகும்.

* சில்லறை உருப்படிகள் வட்டிக்கு உட்படவில்லை என்பதுடன் சராசரி ஆறு மாதங்களில் தீர்க்கப்படுபவைகளாகும்.

**4.19 அட்டுறு செலவினங்கள்**

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | நிறுவனம் 2012 | 2013 |
|---|---|---|
| தேசிய சபைகள் அமைப்புக்கள் | | |
| மன்றங்கள் மற்றும் நிதியங்கள் | **xxxx** | xxxx |
| அட்டுறு செலவினங்கள் | **xxxx** | xxxx |
| **மொத்தம்** | **xxxx** | xxxx |

**4.20 ஏற்பாடுகள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| ஏப்பிறல் 1 இல் மிகுதி | **XXXX** | XXXX |
| ஆண்டின்போது பகிர்வு | **XXXX** | XXXX |
| ஆண்டில் உபயோகித்த ஏற்பாடுகள் | **XXXX** | XXXX |
| ஆண்டின் ஏற்பாடுகளின் விடுவிப்பு | **(xxx)** | (xxx) |
| மொத்தம் | XXXX | XXXX |

இந்த மீதி சட்டரீதியான கோரிக்கைகளை பிரதிபலிக்கின்றது. முகாமை பெரும் பாலும் அவைகளை ABC Sri Lanka தீர்க்குமென கருதுகின்றது. எல்லா ஏற்பாடு களும் ஒரு வருடத்திற்குள் தீர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

**4.21 வங்கி மேலதிகப் பற்றுக்கள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| வங்கி 1 | **XXXX** | XXXX |
| வங்கி 2 | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | XXXX | XXXX |

**4.22 உள்வரும் வளங்கள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| **தொகுப்பு** | | |
| அமைப்பின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கான தொழிற்பாடுகள் | | |
| கொடைகள் - மட்டுப்படுத்தப்பட்ட நிதி | **XXXX** | XXXX |
| கொடைகள் - மட்டுப்படுத்தப்படாத நிதி | **XXXX** | XXXX |
| அறக்கொடைகளின் வருமானம் | **XXXX** | XXXX |
| பொது மக்கள் நன்கொடை | **XXXX** | XXXX |
| கூட்டிணைவு நிதி கொடுப்பனவு | **XXXX** | XXXX |
| பணம்சாராத அன்பளிப்பு | **XXXX** | XXXX |
| வணிக அல்லது ஏனைய தொழிற்பாடுகளிலிருந்து ஆதாயம் (a) ஐப் பார்க்கவும்) | **XXXX** | XXXX |
| ஏனைய நிதித் திரட்டற் தொழிற்பாடு | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | XXXX | XXXX |

**(a) வணிக தொழிற்பாடுகளின் ஆதாயம்:**

| | | |
|---|---|---|
| விற்பனவு வருமானம் | **XXXX** | XXXX |
| கிரயம்/உருப்படிகளின் சீர்மதிப்பு | **XXXX** | XXXX |
| தேறிய ஆதாயம் | **XXXX** | XXXX |

**4.23 ஊழியர் தொடர்பான கிரயங்கள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| ஊதியங்களும் சம்பளங்களும் | **XXXX** | XXXX |
| சமூக காப்பீடும் சமூக நலன்களும் | **XXXX** | XXXX |
| பங்களிப்பு செய்யப்பட்ட சேவைகள் | **XXXX** | XXXX |
| ஓய்வூதிய நலன் கிரயங்கள் | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | **XXXX** | XXXX |

**4.24 செயற்றிட்டம்/தொழிற்பாட்டு நேரடிக் கிரயங்கள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| நிர்வாக கிரயங்கள் | **XXXX** | XXXX |
| ஆலோசனை கட்டணங்கள் | **XXXX** | XXXX |
| பிரயாணம் | **XXXX** | XXXX |
| ஏனையவை | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | **XXXX** | XXXX |

**4.25 வாடகைகள்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| வளாகமும் உபகரணங்களும் | **XXXX** | XXXX |
| போக்குவரத்து (வாகனம்) | **XXXX** | XXXX |
| ஏனையவை | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | **XXXX** | XXXX |

**4.26 நிகர நிதி வருமானம்**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| பங்கு இலாபங்கள் | **XXXX** | XXXX |
| வட்டி | **XXXX** | XXXX |
| காப்பாவண ஆதாயங்கள்/(நட்டங்கள்) | **XXXX** | XXXX |
| **மொத்தம்** | **XXXX** | XXXX |

**4.27 வருமான வரிச் செலவு**

| *மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான* | *நிறுவனம்* | |
|---|---|---|
| | *2012* | *2013* |
| சாதாரண தொழிற்பாடுகளின்மீதான நடப்பு வரி | **XXXX** | XXXX |
| கொடைகள்மீதான NGO வரி | **XXXX** | XXXX |
| மொத்த வருமான வரிச் செலவு | **XXXX** | XXXX |

**ஏற்புடைத்தான வரிவிகிதமும் சார்புடைய நியாயாதிக்கமும்:**

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிர காரம், எல்லா அரச சார்பற்ற அமைப்புக்களும் சம்பாதித்த மேலதிக வருமானத்தின்மீது* xx% *இல் வரி செலுத்த வேண்டும் மற்றும் வருடத்தில் பெற்ற எல்லா கொடைகள்மீது சில குறிப்பிடப்பட்ட விதிவிலக்குகளிற்கமைய* xx% *இல் வரி செலுத்த வேண்டும்.*

ABC *அமைப்பிற்கு இறைவரிச் சட்டத்தின்* xxx *ஆம் பிரிவின் பிரகாரம் வருமான வரியின் விலக் களிப்பு உண்டு. எனவே, சட்டத்தின்* xxx *ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் மானியங்களிற்கு வரி இறுக்கப்படுவதில்லை.*

**4.28 செயற்றிட்ட செயற்பாட்டின் தொகுப்பு**

| இனங்காணப் பட்ட செயற் றிட்டம | மட்டுப்படுத்தப்பட்ட நிதிகளிலிருந்து மாற்றப்பட்டவை | | ஆண்டுக் காலப் பகுதியில் மட்டுப் படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் ஏனைய வளங் களிலிருந்து பெறப் பட்டது | மொத்தச் செலவு | | | | | செயற்றிட்டத்தின் மிகை/ குறைவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அமைப்பு | தொகை | | ஊழியர் | நேர்ஏனைய | | ஏனைய மறைவில் | மொத்தம் | |
| | | | | | சொத்துக்கள் | ஏனைய | | | |
| **வீடமைப்பு** | | | | | | | | | |
| இடம் 1 | | | | | | | | | |
| இடம் 2 | | | | | | | | | |
| ஏனைய | | | | | | | | | |
| **மொத்தம்** | | | | | | | | | |
| **மீன் வளம்** | | | | | | | | | |
| இடம் 1 | | | | | | | | | |
| இடம் 2 | | | | | | | | | |
| ஏனைய | | | | | | | | | |
| **மொத்தம்** | | | | | | | | | |
| **ஏனையயவை** | | | | | | | | | |
| இடம் 1 | | | | | | | | | |
| இடம் 2 | | | | | | | | | |
| ஏனைய | | | | | | | | | |
| **மொத்தம்** | | | | | | | | | |
| நிதிநிலைமை கூற்றிற்கு மாற்றப்பட்டது | | | | | | | | | |
| SFA ஒன்றிற்கு | | | | | | | | | |

*4.29* **மூலதனக் கடமைப்பாடுகள்**

ABC Sri Lanka ...................... மாவட்டத்தில் xxx கோடி ரூபாவில் 10 வீடுகள் கட்டுவதற்கு பொறுப்பேற்றுள்ளது. இந்த தொகையில் நிதிநிலைக்கூற்றுத் திகதி யில் xxx ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

*4.30* **உறுமுரிமை பரிப்புக்கள்**

ABC Sri Lanka கொடையாளி x வழங்கவிருக்கும் நிதிகளின் அடிப்படையில் xxx இடத்திலிருக்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் xxx ரூபா பெறுமதியான உபகரணங் களை வழங்க பொறுப்பேற்றுள்ளது. இந்த நிதிகள் கிடைக்கப்பெறாதபட்சத்தில் ABC Sri Lanka இந்த கிரயத்தை ஏற்கவேண்டி வரும்.

*4.31* **சம்பந்தப்பட்ட தரப்பினர் ஊடுசெயல்கள்**

ABC Sri Lanka, xxx ரூபா பெறுமதியான கணினி தளபாடங்களை வழங்குவதற்காக P and Sons உடன் உடன்படிக்கை செய்துள்ளது. P and Sons இன் உரிமையாளர் ABC Sri Lanka, இற்கு ஒரு ஆலோசகராக பணியாற்றுகின்றார்.

*8- 420*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.